Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 வைகாசி-10 24-05-2005 செவ்வாய்க்கிழமை ஓசை 95



S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்

T.P: 024-222 4247 (சி-11901)

# திருமலையில் தொடர் குண்டு வெடிப்புகள் நேற்று அதிகாலைவரை நீடித்தது

## மோட்டார்குண்டு கண்டுபிடிப்பு

கொழும்பு களுபோவில என்ற இடத்தில் நேற்று மோட்டார் குண்டு ஒன்று கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது. பீரிஸ் மாவத்தையில் உள்ள வடிகால் ஒன்றிலேயே இது கண்டுபிடிக்கப்பட்டது. இது தொடர்பாக விசாரணைகள் தொடர்கின்றன. (32)

## பதற்ற நிலை தொடர்கின்றது

(திருகோணமலை)

**திருகோணமலை மாவட்டத்தில் தொடர் குண்டு வெடிப்புகள் நேற்று அதிகாலைவரை இடம்பெற்றன. இதனால் திருகோணமலை மாவட்டத்தில் மத்திய பஸ்தரிப்பு நிலையத்திற்கு அண்மையில் சட்டவிரோதமான முறையில் வைக்கப்பட்ட புத்தர்சிலையினால் எழுந்த பதற்றநிலை நேற்றைய தினமும் நீடித்தது.**

திருகோணமலை மாவட்ட கரையோர கிராமங்களான கிறிஷா புரி மற்றும் திருக்கடலூர் ஆகிய கிராமங்களில் நேற்று முன்தினம் முன்னிரவு 10.30 தொடக்கம் நேற்று அதிகாலை 1.30 மணிவரை எட்டுக் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன. இதனையடுத்து திருகோணமலைநகர, புறநகர்ப் பகுதிகளில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது. எனினும் குண்டுவெடிப்புச் சம்பவங்களால் எவருக்கும் எதுவித சேதங்களும் ஏற்படவில்லை. இக்குண்டு வெடிப்புகள் தொடர்பாக ஏழு இளைஞர்களைப் பொலிசார் கைது செய்து திருகோணமலை மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தியுள்ளனர். அவர்கள் நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டனர். திருகோணமலை நகரில் இராணுவத்தின பீல்ட் மோட்டார் பைக் அணியினரின் ரோந்து நடவடிக்கை நேற்று தீவிரப்படுத்தப்பட்டிருந்ததைக் காணக்கூடியதாகவிருந்தது. சர்ச்சைக்குரிய புத்தர்சிலைப் பகுதியில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது.(25)

## திருமலை சிறிமாபுரத்தில் புதிய புத்தர் சிலை அமைப்பு

திருகோணமலை சிறிமாபுரத்தில் நேற்று முன்தினமிரவு புதிதாகப் புத்தர் சிலையொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப் புத்தர்சிலை முன்னறிவித்தல் எதுவுமின்றி திடீரென நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இப்பகுதி தமக்குரியதென்பதால் அங்கு புத்தர் சிலையை நிர்மாணிக்க தடை எதுவுமில்லையென அதனை அங்கு வைத்தவர்கள் கூறியுள்ளனர். (32)

## தலதா மாளிகைத் தாக்குதலில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டவர் சிறையில் மரணம்

கண்டி தலதாமாளிகைத் தாக்குதலில் ஈடுபட்டதாகக் கூறப்பட்டு இலங்கையின் வரலாற்றில் அதிகூடிய வருடங்கள் சிறைத்தண்டனை பெற்ற ஒருவர் நேற்று வெலிக்கடைச் சிறைச்சாலையில் உயிரிழந்தார். முத்துசாமிப்பிள்ளை தர்மலிங்கம் என்பவரே நேற்று மாலை உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது. 1997 ஆம் ஆண்டு தலதாமாளிகை மீதானதாக்குதல் நடத்தப்பட்டது. இது தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள மேலும் இரண்டு தமிழர் கள் வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். (32)

## பருத்தித்துறைப் பகுதியில் உந்துருளி மோதியதில் 3 வயதுச் சிறுவன் பலி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கல்லூரி வீதியில் நேற்றுக் காலை உந்துருளி மோதியதில் மூன்று வயதுச் சிறுவன் சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்தார்.சத்தியகுமார் கிருசாந் என்ற சிறுவனே மேற்படி சம்பவத்திலே உயிரிழந்தவராவர்.

காலை 7.30 மணியளவில் வீட்டில் இருந்து ஐம்பது மீற்றர் தூரத்திலுள்ள தந்தையின் வியாபார நிலையத்திற்கு வீதிக் கரையோரமாகச் சென்று கொண்டிருந்த சிறுவனின் பின்னிருந்து மிகவேகமாக வந்த உந்துருளி சிறுவனை மோதி தூக்கி வீசியது. உந்துருளியில் வந்த நபர் காயங்களுக்குள்ளான நிலையில் உந்துருளியுடன் தப்பிச் சென்றுள்ளார்.விபத்தில் உயிரிழந்த சிறுவனின் சடலம் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு பிரேத பரிசோதனையின் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பி.பி.ஸி ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு

பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள் 24 மணித்தியால பணிப்புறக்கணிப்பு ஒன்றை மேற் கொண்டுள்ளனர்.சுமார் 3780 ஊழி யர்கள் பணிகளிலிருந்து விலக்கப்படுவதற்கு எதிராகவே இந்தப் பணிப்புறக்கணிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

இதன் காரணமாக பிரித்தானிய வானொலி மற்றும் தொலைக்காட்சி ஒலிபரப்பில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சதா.தனபாலசிங்கம்,செம்பியன்செல்வன்; நாட்டுப்பற்றாளர்களுக்கு இறுதி அஞ்சலி

நாட்டுப்பற்றாளர் சதா.தனபாலசிங்கம், எழுத்தாளர் செம்பியன் செல்வன் ஆகியோரது இறுதி அஞ்சலிநிகழ்வுகள் நேற்று நடைபெற்றன.

நாட்டுப்பற்றாளர் சதா தனபாலசிங்கம் அவர்கள் தமிழ்மொழி மீது அசையாத பற்றுக் கொண்டவர். தனது வாழ்நாள் முழுவதும் தமிழ்மொழிக்காகவும், ஈழத்தமிழர்களின் விடுதலைக்காகவும் ஈழமண் மீட்பிற்காகவும் அயராது பாடுபட்ட உத்தமர் ஆவார்.

இவ்வாறு நேற்று பிற்பகல் 2.30 மணிக்கு வட்டக்கச்சி முகமட் முன்பள்ளி மண்டபத்தில் இடம்பெற்ற நாட்டுப்பற்றாளர் சதா. தனபாலசிங்கம் அவர்களின் இரங்கல் நிகழ்வில் கலந்துகொண்டு இரங்கல் உரை நிகழ்த்துகையில் கிளி.மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்தார்.

வட்டக்கச்சி பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சுடர் தலைமையில் நடை பெற்ற இரங்கல் நிகழ்வில் பொதுச்சுடரினை தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி அவர்கள் கிளிநொச்சி (12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு.கிரிமிச்சையில் இரு தாக்குதல்களில் ஒருவர்பலி; ஒருவர் படுகாயம்

மட்டக்களப்பு கிரிமிச்சைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இருவேறு தாக்குதல்களில் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார். நேற்று முன்தினமிரவு ஒன்பது மணியளவில் மறைந்திருந்த இனந்தெரியாதோர் நடத்திய தாக்குதலில் அவ்விடத்திலேயே ஒருவர் கொல்லப்பட்டிருக்கின்றார். கொல்லப்பட்டவரின் சடலம் வாழைச்சேனை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இன்னும் சடலம் இனங்காணப்படவில்லை. முன்னதாக ஏழு மணியளவில் கிரிமிச்சையிலேயே இடம் பெற்ற இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி கதிரமலை நவரட்ணம் என்ற 45 வயதுடையவர் படுகாயமடைந்துள்ளார். இவர் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## அப்பாவிச் சிறுவனை கைது செய்து தாக்கிய படையினர் எம்மை வெசாக்கில் கலந்து கொள்ள அழைக்கின்றனர்

### தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் அறிக்கை

புனித தினத்தில் வேலணையில் ஒன்றும் அறியாத அப்பாவி மாணவச் சிறுவனைக் கைது செய்து இரவு முழுவதும் கடுமையாகத் தாக்கிய படையினர் எமக்கு வெசாக்கிற்கிற்கு அழைப்பு விடுக்கின்றனர் என தமிழ் தேசிய விழிப்புணர்வுக் கழகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய எமது தமிழ் பேசும் உறவுகளே நீங்கள் விழிப்புடன் செயற்படுங்கள். காலங்காலமாக எம்மை ஆக்கிரமித்து அடிமைப்படுத்த நினைக்கின்ற சிங்கள இராணுவம் ஏன் இன்று எம் மக்களுக்கு வெசாக் கொண்டாட்டத் திற்கு அழைப்பு விடுக்கின்றனர். அதே நேரம் பிரசித்தி பெற்ற எமது மதங்களோடு பின்னிப் பிணைந்த வழிபாட்டு இடங்களுக்கு ஏன் இன்னமும் எம்மைச் செல்ல அனுமதிக்கவில்லை? நாம் சிந்தித்துச் செயற்பட வேண்டிய தருணம் இது. தமிழ் மக்களை மீண்டும் ஒரு யுத்தப் பொறிக்குள் சிக்க வைத்து வேடிக்கை பார்க்கத் துடிக்கின்ற சிங்கள அரசும் அதன் கைக்கூலி இராணுவமும், இன்று சர்வதேசத்தை (12 ஆம் பக்கம் பார்க்க)

## அழுகிய நிலையில் சடலம் மீட்பு

நேற்றுமுன்தினமிரவு 10 மணியளவில அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை மாவடிப்பள்ளி பாலத்தின் கீழ் வாய்க் காலில் கைகள் இரண்டும் பின்னால் கட்டப்பட்டு கழுத்து வெட்டப்பட்டு சற்றுஅழுகிய நிலையில் காணப் பட்ட 30 வயது மதிக்கத்தக்க இளை ஞனின் சடலமொன்று கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. இதனைப் பொலிசார் கல்முனை ஆதார வைத்திய (12 ஆம் பக்கம் பார்க்க)

## சுழிபுரம் திருவடிநிலை கடற்படைமுகாமை பலப்படுத்தப் படையினர் நடவடிக்கை

### பாதுகாப்பான இறங்குதுறையும் அமைப்பு

யாழ்.சுழிபுரம் திருவடி நிலையத்தில் உள்ள கடற்படை முகாமைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளில் சிறிலங்கா படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

திருவடிநிலை கடற்கரையை அண்மித்துள்ள தம்முகாமைப் பலப்படுத்திவரும் கடற்படையினர் அதனைச் சூழ புதிய காவலரண்களை நிறுவியும்,முட்கம்பி வேலிகளை அமைத்தும் வருகின்றனர். அத்துடன் கடற்படை கடற்கலங்களை பாதுகாப்பிற்காக நிறுத்திவைக்கக் கூடிய பாதுகாப்பு அணைகளுடன் கூடிய இறங்குதுறை ஒன்றையும் (12 ஆம் பக்கம் பார்க்க)

# துயர் பகிர்கின்றோம்



சதா.தனபாலசிங்கம்
22.05.2005

சமூகபொருளாதார அபிவிருத்தி வங்கியின் உருவாக்கத்திலும், வளர்ச்சியிலும், அளப்பெரிய பங்காற்றியவரும்,எமது வங்கியின் பணிப்பாளர் சபையின் செயலருமான எமது அன்புக்குரிய சதா.தனபாலசிங்கம் அவர்களின் மறைவுச் செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைந்துள்ளோம். இந்நிலையில் ஆற்றொணாத் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரின் துயரில்நாமும் பங்கு கொள்வதோடு அன்னாரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பணியாளர்கள்,
சமுகபொருளாதார அபிவிருத்திவங்கி.

(சி.11985)

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
14
-
08
-
1935



மறைவு
22
-
05
-
2005

முன்னைநாள் கிளி/முல்லை மாவட்டங்களின் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவரும்,
முன்னைநாள் தமிழர் புனர்வாழ்வுக்கழக நிர்வாகஅலுவலகருமாகிய

நாட்டுப்பற்றாளர்

## அமரர் சதா- தனபாலசிங்கம்

22-05-2005 ஆம் நாளன்று
அமரத்துவம் அடைந்ததையிட்டு எமது கண்ணீர்
அஞ்சலியைத் தெரிவித்து நிற்கின்றோம்.
அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும்
அவரது குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு
அவர்களது துயரங்களில் நாமும்
பகிர்ந்துகொள்கின்றோம்.

பணிப்பாளர், பணியாளர்கள்,
தமிழர் புனர்வாழ்வுக் கழகம்,
நடுவப்பணியகம்,
கிளிநொச்சி.

(சி.12010)

## வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கலுக்கு பெருந்திரளான மக்கள்

வரலாற்றுப்புகழ்மிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் இவ்வருடம் பெருந்தொகையான பக்தர்கள் வருகைதந்தனர்.

நேற்றுமுன்தினம்முதல் வந்த அடியார்களால் அம்மன் ஆலயவளாகம் நிறைந்துள்ளது. வீதிப்போக்குவரத்து மற்றும் ஆலயவளாக கண்காணிப்புகளில் தமிழீழ காவல்துறையினர் ஈடுபட்டுள்ளனர். இப்பொங்கல் விழாவைச் சிறப்பிக்கும் முகமாக அன்னதானங்கள், தண்ணீர்ப்பந்தல்கள் என்பன அமைக்கப்பட்டு மிகச்சிறப்பாக அம்மாளின் பொங்கல் விழா இடம்பெற்றது. (08)

## நியூ ஈஸ்ரன் பஸ்கம்பனி ஊழியருக்கு அதிகரித்த சம்பளத்தை வழங்கவில்லை

நியூ ஈஸ்ரன் பஸ் கம்பனி, கிழக்குப் பிரதேச போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு அரசாங்கத்தால் சமீபத்தில் வழங்கப்பட்ட 2500 ரூபாவில் 1000ரூபா மாத்திரமே வழங்கப்பட்டுள்ளது. மிகுதி 1500ரூபா இற்றைவரை வழங்கப்படாதது குறித்து ஊழியர்கள், உத்தியோகஸ்தர்கள் கடும் விசனத்தை தெரிவித்துள்ளனர்.

இந்த அதிகரித்த சம்பளத்தை முழுமையாக வழங்கக் கோரி நாடளாவிய ரீதியில் வேலை நிறுத்தம் செய்யப்பட்ட போது அரசாங்கத்தால் ஆயிரம் ரூபா உடனடியாக வழங்குவதெனவும், ஏனைய மீதி விரைவாக வழங்கப்படுமெனவும் உறுதிமொழி வழங்கப்பட்ட போதும் மீதித் தொகை இற்றைவரை வழங்கப்படவில்லை எனஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

# கண்ணீர் அஞ்சலி

## சதா.தனபாலசிங்கம்

எமது இல்லத்தில் உப தலைவராக இருந்துஅரும் பணிகளாற்றி உதவிய நாட்டுப்பற்றாளர் சதா. தனபாலசிங்கம் அவர்களின் மரணச்செய்தி அறிந்து ஆழ்ந்த கவலையடைந்தோம். அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு எமதுஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மாசாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ் சுகின்றோம்.

யோக சுவாமிகள் திருவடி
நிலைய முதியோர் இல்லம்,
பயனாளிகள்,பணியாளர்கள்,
நிர்வாக உறுப்பினர்கள்.

(சி.11983)

# இதயம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலி

மலர்வு
14
08
1935



உதிர்வு
22
05
2005

நாட்டுப் பற்றாளர்
அமரர் சதா.தனபாலசிங்கம்
22.05.2005

கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் தலைவராக இருந்து தனது சீரிய, செம்மையான, நிர்வாக வழிநடத்தலினால் இணையத்தின் அங்கத்துவ நிறுவனங்களோடு இணைந்து மக்கள் சேவையை மகோன்னதப்படுத்திய நாட்டுப் பற்றாளரும், மக்கள் சேவையாளருமாகிய அமரர்.சதா.தனபால சிங்கம் அவர்களுக்கு எமது இதயம் நெகிழ்ந்த கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், மக்களுக்கும் இணையம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றது.

முகாமைக்குழு
அங்கத்துவ நிறுவனங்கள்,
பணியாளர்கள்,
அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி.11986)

# மிக முக்கிய தொகுதியில் ஆளும் கட்சி தோல்வி

# பொதுத் தேர்தலுக்கு ஜேர்மனி அதிபர் ஆலோசனை

(பேர்ளின்)

**ஜேர்மனியில் விரைவில் பொதுத்தேர்தலை நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டு சனாதிபதி ஜெகப்ஸ் புரோடர் தெரிவித்துள்ளார்.**

உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் அவரது சோசலிச சனநாயகக்கட்சி மிக முக்கிய ஆசனம் ஒன்றில் தோல்வி அடைந்ததையடுத்து புரோடர்மேற்படி அறிவித்தலை விடுத்துள்ளார்.

ஜேர்மனியின் மேற்குப்பகுதியில் உள்ள டைனவே ஸ்பானியா மாகாணத்துக்கான தேர்தல்நடைபெற்றது அந்தத் தேர்தலில் புரோடரின் சோசலிச சனநாயகக்கட்சிக்கு 37.6வீத வாக்குகளும் ஹென்சவேட்டிவ்சோசலிசசனநாயகக்கட்சிக்கு 46.6சதவீத வாக்குகளும் கிடைத்தன.இதனை அடுத்து ஸ்பானியாவில் கடந்த 39 வரு டங்களாக தம்மகத்தே கொண்டுள்ள சோசலிச சனநாயக கட்சி அந்த ஆசனத்தை எதிர்கட்சியிடம் தாரை வார்த்துள்ளது. இந்தக் கசப்பான தோல்வியை ஜீரணிக்க முடியாமல் உள்ளதாக குறிப்பிட்ட புரோடர் இந்தத் தோல்வி எதிர்காலத்தில் கட்சியின் அரசியல் நடவடிக்கை களை முன்னெடுத்துச் செல்வதற்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக கூறினார். இதேவேளை பொதுத் தேர்தலிலும் ஆளும் சோசலிச சனநாயகக் கட்சி வீழ்ச்சிப் பாதையை நோக்கிச் செல்லலாமென அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.




அவுஸ்திரேலிய இராணுவத் தளபதி ஜெனரல் பீற்றர் கொஸ குறோவின் மகன் பக்தாத்தில் கார்க் குண்டு வெடிப்பில் காயமடைந்ததை ஒப்புக் கொண்டார். இவரின் மகன் பாக்தாத்தில் நிறுத்தப்பட்டிருந்தமையை இரகசியமாகப் பேணி வந்தவர் ஆவர்.

# சீனாவில் 178 வாத்துகள் திடீர் சாவு பறவைக்காய்ச்சல் பரவும் அபாயம்

(பீஜிங்)

சீனாவில் உள்ள கியூங்ஷாய் பிராந்தியத்தில் கடந்த நான்காம் திகதி 178 வாத்துகள் திடீரென்று இறந்துள்ளதையடுத்து சீன அரசாங்கம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளது.

எனவே, அந்தப் பகுதியில் வாத்து, கோழி இறைச்சி விற்பனையைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்க உத்தர விடப்பட்டுள்ளது. பறவை இறச்சிகளைச் சாப்பிட வேண்டாம் என்று பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 2003 ஆம் ஆண்டு பறவைக் காய்ச்சலுக்கு வியட்னாமில்மூன்று பேரும். தாய்லாந்தில் 12 பேரும், கம்போடியாவில் நான்குபேரும் இறந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



காபூலில் சனாதிபதி மாளிகையில் செய்தியாளர் மாநாட்டில் ஆப்கானிஸ்தானிய சனாதிபதி ஹமீட் கர்சாய் உரையாற்றுகின்றார். அவர் தனதுரையில் அமெரிக்கப் படையினரால் கைதிகள் துன்புறுத்தப்படுவதை நிறுத்தி வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

# ஜோர்ஜ்புஷ் மன்னிப்பு கோரும் வரை போராட்டம் ஓயாது



(ஜகார்த்தா)

அமெரிக்க இராணுவத்தினர் செய்த தவறுக்காக சனாதிபதி புஷ் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று கோரி அமெரிக்க அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது.


ஈராக்கில் அமெரிக்க படைகளால் சிறைப் பிடிக்கப்பட்டுள்ள சிறைக் கைதிகளிடம் இருந்த இஸ்லாமியர்களின் புனித குரானை அமெரிக்க இராணுவ அதிகாரிகள் கழிவறையில் வீசியதாக செய்திகள் வெளியாகி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இதனால், அமெரிக்காவுக்கு எதிராக கலவரம் நடந்தது. இதில் 17 பேர் பலியானார்கள்.

இந்தோனோஷியாவில் ஜகார்த்தாவில் உள்ள அமெரிக்க அலுவலகம் நோக்கி கண்டனப் பேரணி நடந்தது. 7000 பேர் இந்தப் பேரணியில் கலந்து கொண்டனர்.

அங்குள்ள அமெரிக்க தூதர் அலுவலகத்தை அவர்கள் பல மணி நேரம் முற்றுகையிட்டனர்.

அதிபர் ஜோர்ஜ் புஷ் அமெரிக்க இராணுவத்தினர் செய்த தவறுக்காக மன்னிப்புக் கேட்க வேண்டும் அது வரை போராட்டம் ஓயாது என்று போராட்டக்காரர்கள் கூறியுள்ளனர்.

# ஈராக்கில் இரு வேறு தாக்குதலில் 11 பேர் பலி; நூறு பேர் காயம்



பாக்தாத்தில் இரு வேறு தாக்குதல்களில் 11 பேர் பலியானதுடன் 100இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

பாக்தாத்தில் விடுதியொன்றின் முன் இடம்பெற்ற கார்க் குண்டுத் தாக்குதலில் நால்வர் கொல்லப்பட்டதுடன், நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். மற் றைய தாக்குதலில் ஈராக் பிரதமரின் ஆலோசகர் உட்பட ஏழு பேர் மரணம் அடைந்ததாக ஈராக் அமைச்சரக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். காயமடைந்த நூற்றுக்கு மேற்பட்டோர் மூன்று மருத்துவமனைகளிற்கு எடுத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# சிலி முன்னாள் சர்வாதிகாரி பக்கவாதத்தால் பாதிப்பு

சிலியின் முன்னாள் சர்வாதிகாரி அகஸ்டோ பினோஷேவுக்கு (வயது-89) லேசான பக்கவாதம் ஏற்பட்டிருக்கிறது. இதற்காக அந்நாட்டின் சாண்டியாகோ நகர மருத்துவ மனையில் அவருக்கு அவசர சிகிச்சை அளிக்கப்பட்டது. சிகிச்சைக்குப்பின் அவர் வீட்டுக்காவலில் சிறை வைக்கப்பட்டிருக்கும் தனி இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டார்.

அவருக்கு நீரிழிவு வியாதி இருக்கிறது. அத்துடன் இதயக்கோளாறு காரணமாக செயற்கை இதயம் பொருத்தப்பட்டிருக்கிறது. முதுமை காரணமாக பல இடங்களில் விழுந்து உடலில் எலும்பு முறிவுகளும் ஏற்பட்டுள்ளன. 1973 முதல் 1990 வரை சிலி நாட்டை அவர் ஆண்டார். சர்வாதிகாரியான அவர் தன்னை எதிர்த்தவர்களை எல்லாம் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கினார்.

## ஆற்றில் பாய்ந்தது பேருந்து பெருவில் 30 பேர் பலி; 27 பேர் படுகாயம்

பெருநாட்டின் வடகிழக்குப் பகுதியில் உள்ள ஜயுஜா நகர் அருகில் வேகமாகச் சென்று கொண்டிருந்த பேருந்து ஆற்றுக்குள் விழுந்ததில் அதில் பயணம் செய்த 30 பேர் உயிரிழந்துள்ளனர். 27 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மோசமான வானிலை காரணமாக விபத்து ஏறபட்டதாகக் கூறப்படுகிறது. காயத்துடன் உயிர் தப்பிய பயணி ஒருவர் கூறுகையில், "மழை பெய்து கொண்டிருந்ததால் வீதியில் தண்ணீர் தேங்கி நின்றது. தூக்கக் கலக்கத்திலும் ஓட்டுநர் பேருந்தை வேகமாக ஓட்டிச் சென்றார்" என்று ஆவேசத்துடன் கூறினார்.

# இங்கிலாந்தில் முதல்முறையாக குளோனிங் மனிதக்கரு உற்பத்தி

(லண்டன்)

இங்கிலாந்து விஞ்ஞானிகள் குளோனிங் முறையில் மனிதக் கருவை உற்பத்தி செய்துள்ளனர்.

இங்கிலாந்தில் உள்ள நியூகேஸ்டில் பல்கலைக்கழக விஞ்ஞானிகள், "ஸ்டெம்செல்" ஆராய்ச்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

புதிதாக ஸ்டெம் செல்களை உருவாக்குவதன் மூலம், இதுவரை தீர்க்க முடியாததாகக் கருதப்படும் பலவகையான நோய்களைக் குணப்படுத்த முடியும். என்நியூகேஸ்டில் பல்கலைக்கழக விஞ்ஞானிகள், 11 பெண்களிடம் இருந்து கரு முட்டைகளைச் சேகரித்தார்கள். அந்தக் கருமுட்டைகளிலிருந்த மரபு அணுக்கூற்றை அப்புறப்படுத்தினார்கள்.

எந்த நோயாளிகளுக்கு ஸ்டெம் செல்கள் தேவையோ அவர்களின் மரபு அணுக்கூற்றை அந்தமுட்டையில் செலுத்தி அவற்றைக் கருவாக உருவாக்கினார்கள். இதன் மூலம் குளோனிங் முறையில் கரு உற்பத்தியைச் செய்து சாதனை படைத்தனர்.

இவ்வாறு குளோனிங் மூலம் உருவான மனிதக் கருவில் இருந்து நோயாளிகளுக்குத் தேவையான எம்பிரியானிக் ஸ்டெம் செல்கள் அதிகளவில் உற்பத்தி செய்யப்படும் என்றும் அதன் மூலம் அவர்களின் நோய்களைக் குணப்படுத்த முடியும் என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# பாரதீய ஜனதாக்கட்சி உறுப்பினர்களுக்கு இஸ்ரேல் பாராளுமன்றத்திற்குச் செல்லத்தடை

(ஜெருசலேம்)

இந்தியாவில் இருந்து சென்ற பாரதிய ஜனதாக் கட்சி எம்.எல்ஏ.க்கள் மஞ்சள்நிறத் துண்டு அணிந்து வந்ததால், இஸ்ரேல் பாராளுமன்றத்திற்குள் செல்ல அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலில் காசா செரீப் பகுதியில் யூதர்கள் குடியிருப்புள்ளது. அவர்களை அங்கிருந்து வெளியேற்றி வேறு இடத்தில் குடியமர்த்த வேண்டும் என்பது இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோனின்திட்டம். இந்தத் திட்டத்தை எதிர்ப்பவர்கள் ஒரேஞ் நிறக் கொடியைக் கையில் ஏந்தி பிரதமருக்கு எதிராகப்போராடி வருகின்றனர்.

இந்நிலையில், இந்தியாவில் இருந்து இஸ்ரேல் சென்றுள்ள பா.ஜ.எம்.எல்ஏ.,விஜய் ஜோலி தலைமையிலான குழுவினர் அந்நாட்டின் பாராளுமன்றத்திற்குச் சென்றனர். அப்போது காவி நிறத்தில் தாமரைச் சின்னம் பொறிக்கப்பட்ட துண்டைத் தோளில் அணிந்து சென்றனர். இந்த நிறம் பிரதமர் ஏரியல்ஷரோனை எதிர்ப்பவர்களின் கையில் உள்ள ஒரேஞ் நிறக் கொடியைப் போல் இருந்தால் இராணுவத்தினர் அந்தத் துண்டுடன் பாரதிய ஜனதாக் கட்சி எம்.எல்.ஏ.க்களை உள்ளே அனுமதிக்க மறுத்தனர். துண்டை அப்புறப்படுத்தும்படி கேட்டுக் கொண்டனர். அதனால், விஜய் ஜோலியும் மற்றவர்களும் துண்டைக் கழற்றி வைத்துவிட்டு பாராளுமன்றத்திற்குள் சென்றனர்.



பாக்தாத்தின் வடகிழக்கே 60 கி.மீ. அப்பாலுள்ள அமைதியற்ற பகுவா நகரில் ரோந்து பணியில் ஈடுபடுகின்ற ஈராக்கியப் படையினர்,





அனிதா சிவராம்



நவம் அறிவுக்கூடகட்டட நிதியத்துக்காக கனடா பாரதநாட்டிய ஆசிரியர் சங்க ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை சேர். ஜோன் மைக்டொனால்ட் கலையரங்கில் சலங்கை நாதம் என்னும் தலைப்பில் கலைநிகழ்வுகள் இடம் பெற்றன. இதில் விசேட விருந்தினராக தாயக விடுதலைப்போருக்கு தனது பெரும் ஆதரவை வழங்கிய முன்னாள் தமிழ்நாடு முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரனின் பேத்தி அனிதா சிவராமின் விசேட நடனங்களும் இடம் பெற்றன. இவர் இதற்கென்றே இந்தியாவில் இருந்து வருகை தந்திருந்தார். இவர் கூறுகையில்;தனது தாத்தா போன்றே தன்னால் முடிந்த வகையில் தமிழீழ போராட்டத்திற்கு தனது நடனக்கலையை வைத்து உதவி புரிவதாகக் கூறினார். நிகழ்வு மாலை 6.00 மணிக்கு தொடங்கி நள்ளிரவு 12 மணிக்கு முடிவுற்றது. (தகவல், படங்கள் : எழிலன்)

# அம்பாறையில் பாதிப்புற்ற பெண்களின் சுயதொழில் முயற்சிக்கு ஊக்குவிப்பு

(மட்டக்களப்பு)

**அம்பாறை மாவட்டத்தில் யுத்தம், வெள்ளப்பெருக்கு மற்றும் சுனாமி பேரழிவின் போது பாதிக்கப்பட்ட பெண்களை இனம் கண்டு அவர்களுக் கான சுயதொழில் முயற்சிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நட வடிக்கை ஆரம்பமாகியுள்ளது.**

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் க.தங்கேஸ்வரி அரசசார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு எடுத்துக்கொண்ட நடவடிக்கையின் பேரில் அம்பாறை மாவட்டத்தில் செயற்படும் சுமார் இருநூறுக்கு மேற்பட்ட அரசசார்பற்ற அமைப்புக்கள் இதில் ஈடுபட்டுள்ளன.

கிராம சேவையாளர் மட்டத்தில் அவர்கள் மேற்கொள்ளக்கூடிய சுயதொழில் முயற்சிகளையும், அந்தப் பிரதேசத்தில் கிடைக்கக்கூடிய இயற்கை வளங்கள் பற்றிய விபரங்களையும் சேகரிப்பதில் அதிகமான அரசசார்பற்ற நிறுவனங்கள் ஈடுபட்டு வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

முதற்கட்டமாகத் தையல் கோழிவளர்ப்பு, ஆடு வளர்ப்பு போன்றவைகளுக்கு ஊக்குவிப்பு வழங்கப்பட்டு வருகின்றது. அதிகமான பெண்கள் தங்கள் உழைப்பாளிகளை இழந்து குடியிருப்பு வசதிகளையும் இழந்து உறவினர்களின் இல்லங்களிலும் நலன்புரி நிலையங்களிலும் இருந்து வருகிறார்கள்.

இவர்களுக்குச் சுயதொழில் முயற்சிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்கு முன்பு ஒரு நிரந்தரமான வீட்டை அவர்கள் முன்னர் இருந்த இடங்களிலோ அல்லது வேறு இடங்களிலோ அமைத்துக்கொடுத்த பின்பு இந்த உதவிகள் வழங்கப்பட்டால் பயனுள்ளதாக இருக்கும். தற்போது நாங்கள் உறவினர்கள் வீடுகளிலும், இடைத்தங்கல் முகாம்களிலும் குடியிருக்கிறோம். இந்த நிலையில் சுயதொழில் முயற்சிக்காகக் கொடுக்கப்படும் உதவிகளை முழுமையாகப் பயன்படுத்த முடியாத நிலையினை பாதிக்கப்பட்ட பெண்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

# மகளிர் அ.நிலையத்தின் கண்காட்சியும் விற்பனையும்

(மல்லாவி)

துணுக்காய் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் 2004ஆம் ஆண்டிற்குரிய கண்காட்சியும் விற்பனையும் அனிஞ்சியன் குளம் தமிழ்க்கலவன் வித்தியாலயத்தில் கடந்த 15ஆம் திகதி காலை ஒன்பது மணிக்கு தையல் டிப்ளோமா மாணவியான ஆறுமுகம் நாகநந்தினி தலைமையில் இடம்பெற்றது.

கண்காட்சி மண்டபத்தினை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சு.சவிகரன் நாடாவினை வெட்டித்திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மங்கல விளக்கினை அனிஞ்சியன் குளம் கிராம சேவையாளர் பி.அசோகன், அனிஞ்சியன்குளம் பாடசாலை அதிபர் கு.ஜெகதீஸ்வரன் ஆகியோர் ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் கொடியை முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றி வைத்தார்.

கருத்துரைகளை மல்லாவி மருத்துவமனை வைத்தியர் திருமதி.ஏகாம்பரமூர்த்தி, யோகபுரம் மகாவித்தியாலய முதல்வர் திருமதி. க. கிருஸ்ணபிள்ளை, துணுக்காய்ப் பிரதேச மகளிர் போதானாசிரியர் திருமதி. கே.தேவதாசன் முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் அ.தனிநாயகம் ஆகியோர் வழங்க, சிறப்புரையை முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஆற்றினார்.

தொடர்ந்து கண்காட்சியும் விற்பனையும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் கிராம அபிவிருத்திச்சங்க பிரதிநிதிகள், பொது அமைப்புக்கள், பொது மக்க ளெனப் பலர் கலந்து கொண்டனர். (24)

## புதிய பிரதேச செயலர் பதவியேற்பு

(மன்னார்)

மன்னார் நகரத்தின் புதிய பிரதேச செயலராக திருமதி ஸ்ரனிடீமெல நந்தினிகுரூஸ், நியமிக்கப்பட்டுள்ளார். அண்மையில் பிரதேச செயலகத்தில் இடம் பெற்ற இப்பதவியேற்பு நிகழ்வில் முன்னாள் நகர பிரதேச செயலாளர் ஆர்.வலதீஸ்வரன் வரவேற்று அறிமுகம் செய்து பொறுப்புக்களைக் கையளித்தார்.

இதே வேளை ஆர்.வலதீஸ்வரன் எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் யாழ்.பருத்தித்துறை செயலாளராக பதவியேற்கவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (18)

# எதிர்கால நடவடிக்கைகள் குறித்து சி.க.கூ.ச.சமாசத்தில் ஆராய்வு

(ஒட்டுசுட்டான்)

சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் பொதுச்சபைக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் நடைபெற்றது.

தலைவர் கா.குணசிங்கத்தின் தலைமையில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கினை முல்லை. மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் சி.மோ.சிவமயம், முல்லை.மாவட்ட தமிழீழ நிர்வாக சேவையின் கூட்டுறவுப் பகுதிப் பொறுப்பாளர் தே.சாந்தன் உதயதாரகை சி.க.கூ.ச பிரதிநிதி செ.இரத்தினம் ஆகியோர் ஏற்ற தேசியக் கொடியினை தமிழீழ நிர்வாக சேவையின் முல்லை.மாவட்ட கூட்டுறவுப் பகுதிப்பொறுப்பாளர் தே.சாந்தன் ஏற்றினார். கூட்டுறவுக் கொடியினை முல்லை.மாவட்ட கூட்டுறவு' அபிவிருத்தி ஆணையாளர் சி.மோ. சிவமயம் ஏற்றினார்.

கலந்துரையாடலில் சி.க.கூ.சங்கங்களின் வளர்ச்சி அதன் எதிர்கால நடவடிக்கைகள் ஆராயப்பட்டது.

இதில் தலைவராக கா.குணசிங்கம் உப தலைவராக சி.கணேசலிங்கம் ஆகியோருடன் மேலும் ஏழு நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (05)

## தாயகம் வருகை

(மாந்தை)

இந்தியா விருதுநகர் மாவட்டத்தில் கூழாங்குடி அகதி முகாமிலிருந்த ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை தலைமன்னார் ஊடாக தாயகம் திரும்பினார்.

இவர் முதல் நாள் இராமேஸ்வரத்தில் இருந்து இந்திய மீன்பிடிப் படகு மூலம் தீடை என அழைக்கப்படும் மண் மேட்டில் இறங்கி தவித்துக் கொண்டிருந்த வேளையில் அவ்வழியால் வந்த சிறிலங்காப் கடற்படையினர் இவரை மீட்டு மன்னார் பொலிசாரிடம் ஒப்படைத்தனர். அவரை தலைமன்னார் பொலிசார் மன்னார் பதில் நீதிபதி முன்னிலையில் முன்னிலைப்படுத்தினர். அவரை மன்னார் பதில் நீதிபதி வவுனியா ஈச்சங்குளத்துக்கு மன்னார் நகர கிராம உத்தியோகத்தர் மூலம் அனுப்பி வைக்க உத்தரவிட்டார். (18)

## கால்நடை வளர்ப்போருக்கு பயிற்சி வகுப்பு

(ஒட்டுசுட்டான்)

தண்டுவான், இத்திமடு, பழம்பாசி ஆகிய கிராமங்களில் கால்நடை வளர்ப்போரின் நன்மை கருதி நடமாடும் சேவையும் பயிற்சி வகுப்பும் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஏழாம் திகதி தண்டுவான் பாடசாலையில் இப்பயிற்சி வகுப்பு நடைபெறவுள்ளது.

எனவே கால்நடை வளர்ப்போர் தங்கள் கால்நடைகளின் நோய்க்கான சிகிச்சை தடுப்பூசி, செயற்கை முறைச் சினைப்படுத்தல் ஆகியனவற்றை அறிந்து கொள்ளத் தவறாது கலந்து கொள்ளுமாறு ஒட்டுசுட்டான் கால்நடை வைத்திய நிலையம் கேட்டுள்ளது. .(05)

## பொதுக்கூட்ட அழைப்பு

(முள்ளியவளை)

முல்லைத்தீவு மகாவித்தியாலய அபிவிருத்திச் சங்க பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 31ஆம் திகதி பி.ப.2.30 மணிக்கு மகாவித்தியாலய மண்டபத்தில் வித்தியாலய முதல்வர் தலைமையில் இடம்பெறவுள்ளதால் மேற்படி வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோர், நலன் விரும்பிகள் தவறாது சமுகமளிக்குமாறு முல்லைத்தீவு மகாவித்தியாலய அபிவிருத்திச் சங்க செயலாளர் கேட்டுள்ளார்.

மேற்படி வித்தியாலயமும் அப்பகுதி நகரமும்சுனாமி ஆழிப் பேரலையினால் அழிவுக்குள்ளாகி அப்பகுதி மாணவர்கள் இடம் பெயர்ந்து தற்காலிகக் குடியிருப்புக் களில வசித்து வருகின்றமை குறிப் பிடத்தக்கது. (ஆ)

# தொழில் வழிகாட்டல் செயற்றிட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொழில் வழிகாட்டல் செயற்றிட்டமொன்று மஞ்சந்தொடுவாய் தொழில்நுட்பக் கல்லூரியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இந்நிகழ்வின் போது தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபர் எம்.குணரெட்ணத்தின் வழிகாட்டலின் பேரில் இத்திட்டத்தில் விரிவுரையாளரான தியாகராசா தலைமையில் இத்திட்டமானது நடைபெற்று வருகின்றது. பாடசாலையை விட்டு விலகிய மாணவர்கள் தொழில்நுட்பக் கல்லூரியில் ஆர்வம் காட்டி சுயதொழிலில் எப்படி ஈடுபடுவது என்பதைத் தெளிவுபடுத்தும் முகமாக அம் மாணவர்களுக்கு ஆலோசனையை வழங்குவது இத்தொழில் வழிகாட்டல் திட்டத்தின் நோக்கமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# களவாடப்பட்ட பொருட்களுடன் சந்தேக நபர் கைது!

நட்டாங்கண்டல் பகுதியில் அண்மையில் திருட்டுப்போன பொருட்களை துணுக்காய் காவல்துறையினர் மீட்டதுடன் சந்தேக நபரையும் கைதுசெய்து விசாரணைகளும் மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்படி நட்டாங்கண்டல் பகுதியில் வசிக்கும் திருநாவுக்கரசு திருமாறன் என்பவரின் வீட்டில் நள்ளிரவில் வீட்டார்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் வேளையில் வீட்டிற்குள் புகுந்த திருடர்களால் வீட்டிற்குள்ளிருந்த டெக் ஒன்றும் ஜெனரெக்டர் ஒன்றும் திருடப்பட்டது. இதனையடுத்து துணுக்காய் காவல்துறையினர் அன்று திருட்டுப்போன பொருட்களை மீட்டதுடன் சந்தேக நபரையும் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு மல்லாவி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தியுள்ளனர். (24)



கிளிநொச்சி கிருஸ்ணபுரம் கிராமசேவை அலுவலராக பலவருட காலம் பணிபுரிந்து இடமாற்றம் பெற்றுச்செல்லும் கிராம சேவை அலுவலர் க. வைரவநாதனுக்கு கிருஸ்ணபுரம் மக்களால் சேவைநலன் பாராட்டு கடந்த வியாழக்கிழமையன்று கிருஸ்ணபுரம் கிராம அபிவிருத்திச்சங்கத்தில் நடைபெற்றது. மக்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட தங்கச் சங்கிலியினை கரைச்சிப்பிரதேச விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தம் கிராம சேவை அலுவலருக்கு அணிவிப்பதனை படத்தில் காணலாம். (படம்:சோதி)

# தென்மராட்சி உயர்பாதுகாப்பு வலயத்தில் மீளக்குடியமர அனுமதிக்கக் கோரும் மாநாடு

## அனைவரையும் அணிதிரண்டு வரும்படி மாதர் அமைப்புக்கள் கோரிக்கை

(தென்மராட்சி)

**இன்று காலை பத்து மணிக்கு ஆரம்பமாகவுள்ள உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கக் கோரும் மாநாட்டிற்கு அனைவரையும் அணிதிரண்டு வரும்படி தென்மராட்சி மாதர் அமைப்புக்கள் அறை கூவல் விடுத்துள்ளன.**

மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ள இறுதிக்கட்ட உயர்மட்ட மாநாட்டில் இப்பிரதேசத்தில் இராணுவ ஒடுக்குமுறையாலும், மண் பறிப்பாலும் இடம் பெயர்ந்து இல்லிடம் இன்றி வாழும் இரண்டாயிரத்துக்கும் அதிகமான குடும்பங்களின் வாழ்க்கையைக் கேள்விக்குள்ளாக்கியுள்ள இராணுவ உயர்பாதுகாப்பு வலயம் முற்றாய் அகற்றப்படும் வரை நாம் ஓயப்போவதில்லை என்றும் அதற்கு என்ன விலை கொடுக்கவும் நாம் தயார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சியில் உயர்பாதுகாப்புப் பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் இராணுவத்தினர் தமது வீடுகள், காணிகள், பாடசாலைகள், தேவாலயங்கள், கோயில்களிலிருந்து அகன்று தம்மை மீளக்குடியேற அனுமதித்து இயல்பு வாழ்க்கைக்கு வழிவிட வேண்டும் எனக்கோரி பல வெகுசனப் போராட்டங்களை கடந்த காலங்களில் நடத்தியிருந்தனர்.

இதேவேளை தென்மராட்சிப் பிரதேசத்தில் எந்த அனுமதியும் இன்றி பொதுமக்களின் காணிகளிலும், சைவ ஆலயங்களுக்கு அருகிலும் ஐம்பதுக்கும் மேற்பட்ட சிறிய சிறிய புத்தகோயில்கள் நிறுவப்பட்டிருப்பதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சிறிலங்காப் படைகளால் இப்பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளில் உயர்பாதுகாப்பு வலயம் என பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளிலேயே அதிகளவான புத்த கோயில்கள் நிறுவப்பட்டு இருப்பதுடன், ஆக கிரமிப்பின் சின்னங்களாகவும் இவைமாறி வருவதாகவும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

இம்மாநாட்டில் இப்பிரதேசங்களில் இருந்து இடம் பெயர்ந்து குடாநாடு எங்கும் சிதறிப்போயுள்ள 2000இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அணிதிரளவுள்ளதாகவும் இம்மாநாட்டிற்கு அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிகள் அனைத்துப் பத்திரிகையாளர்கள், பொது அமைப்புகள், தேசிய எழுச்சிப் பேரவை, மாதர்சங்கங்கள், விவசாய சம்மேளனங்கள், வர்த்தகசங்கங்கள், இப்பிரதேச பாடசாலை ஆசிரியர், அதிபர்கள், பொதுமக்கள் அணிதிரளவுள்ளதாகவும் இம்மாநாட்டில் பல முக்கிய முடிவுகளை இடம் பெயர்ந்தோர் நலன்புரிச்சங்கம் எடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (28)

# பாசையூர் பொதுக்கட்டடங்களிலிருந்து படையினரை விலகக் கோரிக்கை

## -பாசையூர் அபிவிருத்திக்குழு கடிதம்

(யாழ்ப்பாணம்)

பாசையூர் பகுதியில் படையினரின் உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பகுதியில் பொதுமக்களின் பாவனைக்குரிய சனசமூக நிலையம், வாசிகசாலை, கலாச்சார மண்டபம், கல்யாண மண்டபம் போன்றவற்றை விட்டு படையினர் வெளியேற வேண்டுமென பாசையூர் பகுதி அபிவிருத்திக் குழு படைத்தரப்பு மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

மக்களின் சமூக அவையவங்களாக விளங்கும் இவ்விடங்கள் தொடர்ந்தும் படைத்தரப்பால் தடுக்கப்பட்டு இருப்பது சமூக அமைதிக்கும், மனித உரிமைகளுக்கும் எவ்வளவு முக்கியத்துவத்தை சிறிலங்கா அரசு கொடுக்கிறது என்பதை காட்டுவதாகவும் உடனடியாக இவ்விடங்கள் மக்களின் பாவனைக்கு படையினர் அனுமதிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (28)

# படையினரால் மரங்கள் தறிக்கப்படுவதற்கு சூழல் பாதுகாப்பு அமைப்பு கண்டனம்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் சிங்களப் பண்டிகையான வெசாக் கொண்டாடுவதற்கு படையினரால் பனை, தென்னை மரங்கள் தறிக்கப்படுவதற்கு சூழல் பாதுகாப்பு அமைப்பு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

படையினரால் இப்பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளில் நிகழ்த்தப்படும் நிகழ்ச்சிகளுக்கு மரங்கள் பல தறிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டிடுப்பது ஒரு இனத்தின் உரிமைகளையும் வளங்களையும் சிங்கள படைகள் எவ்வாறு மதிக்கின்றன என்பதை காட்டுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ் மக்களின் வளங்கள் அழிந்து வருவது குறித்து இவ்வமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது. (28)

# ஒரு பிரதேசத்தின் வளர்ச்சி மக்களின் பங்களிப்பிலேயே தங்கியுள்ளது

## —தென்மராட்சி பிரதேசச் செயலர்-

ஒரு பிரதேசத்தின் வளர்ச்சி என்பது அப்பிரதேசத்தில் வாழும் மக்களின் பங்களிப்பிலேயே தங்கியுள்ளது. இவற்றை உணர்ந்து நாம் செயற்படுவோமேயானால் வெகு விரைவில் இப்பிரதேசத்தை உரிய வளர்ச்சிப்போக்கில் கொண்டு செல்ல முடியுமென்று தென்மராட்சி பிரதேசசபை செயலாளர் பாலச்சந்திரன் தெரிவித்துள் ளார். பல்வேறு வளர்ச்சித்திட்டங்களை முன்னெடுப்பதில் மக்களின் பங்களிப்பு இன்னும் உணரப்படாமையால் ஒத்துழைப்போரைக்காட்டிலும் விமர்சிப்போர் தொகை அதிக வீதத்தில் இருப்பதாகவும் கருத்துத் சொல்வோர் செயலிலும் பிரதேச வளர்ச்சிக்கு பணியாற்ற முன்வரும் பொழுதே இப்பிரதேசம் வளர்ச்சிப் போக்கை எட்ட முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (28).

## - யாழ்.குடாநட்டில் -

# யாழ்.இல் கால்நடை வளர்ப்போர் கூ.சங்கங்களை புனரமைக்க த.பொ.மே.நிறுவனம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிலுள்ள கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கங்கள் புனர மைக்கப்பட உள்ளதாக பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

குடாநாட்டிலுள்ள பல்வேறு கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கங்களில் நிலவும் குறைபாடுகள் மற்றும் தேவைகளை கருத்தில் எடுத்தே அனைத்துச் சங்கங்களையும் புனரமைப்புச் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (28)

## வலிகாமம் தெற்கில்

# 30 மலசல கூடங்கள் அமைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலிகாமம் தெற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 30 மலசல கூடங்களையும் இரு பொதுக் கிணறுகளையும் அமைத்துக் கொடுப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு நிதியம் முன்வந்துள்ளது.

இவை யுத்தத்தால் பாதிக்கப்பட்டு கணவன்மாரை இழந்து பெண் தலைமைத்துவம் உள்ள குடும்பங்கள் மற்றும் வறுமைக்கோட்டிற்குட்பட்ட குடும்பங்கள் ஆகியவற்றிற்கு அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. இதற்கான பயனாளிகள் தெரிவு கிராம சேவையாளர்களூடாக இடம்பெற்றுவருகின்றன. (33)

# தென்மராட்சியில் குளங்கள், வாய்க்கால்கள் த.பொ.மே.நிறுவனத்தால் புனரமைப்பு

(தென்மராட்சி)

பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உதவியுடன் தென்மராட்சிப் பிரதேசத்தில் குளங்கள், வாய்க்கால்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் படி கச்சாய்குள வாய்க்கால், கண்டுவில்குளம், நெடுங்குளம், வட்டத்தாழ்வுக்குளம், விளைவேலி வாய்க்கால், வெல்லங்குளம் வாய்க்கால் புனரமைப்புப் பணிகள் தொடங்கி இருப்பதாகவும் இப்பணிகளில் விவசாய சம்மேளனமும் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(28)

# முகிழ்-2005 காண்பிய கலைக்காட்சி

யாழ் பல்கலைக்கழக நுண்கலைக்கலைத் துறையின் கலைவட்டம் சென்ற வருடம் யூலை, ஆகஸ்ட் மாதங்களில் நடாத்திய 13 யாழ்ப்பாணத்து ஓவியர்களின் காட்சியைத் தொடர்ந்து மேற்படி கண்காட்சியை எதிர்வரும் ஆகஸ்டில் நடாத்த திட்டமிட்டுள்ளது. இதில் 25 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட படைப்பாளிகள் பங்குபற்றலாம், பங்குபற்ற விரும்புவோர் தமது சுயவிபரக்கோவையுடன் தம்மால் அண்மைக்காலத்தில் உருவாக்கப்பட்ட காண்பிய படைப்புகளின் (ஓவியம், சிற்பம், தாபனக்கலை) புகைப்படங்களையும் இணைத்து செயலாளர் கலைவட்டம், நுண் கலைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம் எனும் முகவரிக்கு யூன் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

# நடைபாதை ஜோசியர் குறித்து விழிப்புடன் இருக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப்பகுதியில் நடமாடும் நடைபாதை ஜோசியக்காரர்கள் குறித்து விழிப்புடன் இருந்து கொள்ளுமாறு பொதுமக்களுக்கு எச்ரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.நகரில் வீதியோரமாக இருந்தவாறு ஜோசியம் கூறும் ஜோசியக்காரர்கள் சிலர் வசீகரமான வார்த்தைகளைக் கூறி பொதுமக்களை ஜோசியம் பார்க்க அழைக்கின்றனர்.

இவ்வாறு பொதுமக்களை ஏமாற்றி அவர்கள் வசமுள்ள பணத்தையும் பிடுங்கிக் கொள்வதுடன், அவர்கள் வைத்திருக்கும் நகை, பணம் போன்றவற்றின் விபரங்களை அறிந்து அவர்களைப் பின் தொடர்ந்து சென்று வழிப்பறியிலும் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறான பலசம்பவங்கள் யாழ். நகரிலும் அதை அண்டிய பகுதிகளிலும் அண்மைக்காலமாக இடம் பெற்று வருகின்றமையைக் காரணம்காட்டியே யாழ்ப்பாணம் பொலிசார் பொதுமக்களை விழிப்புடன் இருக்குமாறு எச்சரித்துள்ளனர். (33)

## -யாழ்.பல்கலைநூலகத்தைப் பயன்படுத்த-

# வெளிவாரிமாணவருக்கு அனுமதி வழங்கப்படவிருக்கிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் கீழ் வெளிவாரிப் பட்டப்படிப்பினைத் தொடர்ந்து வரும் மாணவர்களும் யாழ்.பல்கலைக்கழக வளங்களைப் பயன்படுத்தி தம் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு ஏற்ற வசதிகள் செய்து கொடுக்கப்படவிருப்பதாக யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி இரா.சிவச்சந்திரன் கூறியுள்ளார்.

இதனடிப்படையில் யாழ்.பல்கலைக்கழகத்தில் பதிவு செய்துள்ள வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தின் நூலகம் முதலான அறிவியல் வளங்களைப்பயன்படுத்துவதற்கும்,

யாழ். பல்கலைக்கழக வளங்களையும் பேராசிரியர், விரிவுரையாளர்கள் ஆகியோரது ஒத்துழைப்புக்களையும் பயன்படுத்தியும் வெளிவாரி மாணவர்களுக்கு கருத்தரங்குகள், கற்றல் வழிகாட்டல்கள் கல்வியியல் ஆய்வுகள் என்பனவற்றை நடத்துவதுபற்றி ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் மேலும் கூறியுள்ளார். (33)

இந்திய அரசியலில் பல்வேறு பட்ட காய் நகர்த்தல்களுக்கு மத்தியிலும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியரசு தனது ஆட்சியை ஒரு வருடம் பூர்த்தி செய்திருக்கின்றது. ஆனாலும ஒரு வருட காலத்தை ஐக்கிய முற்போக்கு கூட்டணியரசு நிறைந்த சவால்களுக்கு மத்தியில் தான் நகர்த்தியிருக்கின்றது என்றால் மிகையில்லை.

அந்த வகையில் நேற்று முன் தினம் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி தனது ஒரு வருட பூர்த்தியை கொண்டாடியுள்ளது. என்றாலும் இனிவரும் காலங்கள் மத்தியரசிற்கு மிகுந்த சோதனைக் காலங்களே.... என்று கூறுமளவிற்கே நிலைமைகள்

அந்தவகையில் இந்திய அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய விடயம் மார்க்சிஸ்ட்



நிறைவேற்றுவதற்கு இன்னும் இரண்டு வருடங்கள் அவகாசம் கொடுப்போம் அதன் பின்னரும்

கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் ரி.ஆர்.பாலுவின் மகனது திருமணத்தின்போது திருமண சடங்கா.... அரசியல் அரங்கா... நடைபெற்றது. எனும் சந்தேகம் கிளப்பப்பட்டிருக்கின்றது. ஏனெனில் வேற்று மாநில தலைவர்கள் எல்லோருமே இங்கே கலந்து கொண்டமையானது நிச்சயம் காங்கிரஸ் கட்சிக்கு புளியை கரைக்காமல் இருந்திருக்க வாய்ப்பில்லை.

அதுமட்டுமன்றி காங்கிரஸ் கட்சிக்கு உறுதுணையாக தமிழகத்தில் கை கொடுத்த திமுக தலைவர் கருணாநிதியே கூட மத்தியரசிற்கு ஆப்பு வைத்துவிடும் நிலை இருப்பதாக புரளி ஒன்று எழுந்திருக்கின்றது. ஏனெனில் அண்மையில் சரத்பவார்

காகவேதான் இவ்வாறு மாயாஜால வித்தை காட்டுகின்றார். தி.மு.க தலைவர் என்று பேசப்படுகின்றது.

எனவே கூட்டணியாட்சியை மிகவும் இலகுவாக நடத்திச் செல்லமுடியும் எனும் மத்தியரசின் நம்பிக்கை கூட்டணி கட்சிகளி னாலேயே தகர்க்கப்படுமோ.... எனும் அச்சமும் இல்லாமலில்லை.

ஏனெனில் அவரவர் தமது விருப்பங்களை மட்டுமே இலக்காக்கிக் கொண்டு செயற்படுகின்றனர். மத்தியரசு தமது எல்லா வகை ஆசைகளுக்கும் தூபம் போட வேண்டுமென்பது தான் தி.மு.க உள்ளிட்ட மார்க்சிஸ்ட் கட்சிகளின் அதீத அவா இந்த நிலை நிறை

# காங்கிரசை அச்சுறுத்தும் —மூன்றாவது அணி!



சுர்ஜித்துடன் பிரகாஷ் காரத்

அரங்கேறிக் கொண்டிருக்கின்றது.

சில பிரச்சினைகள் வெளிப்படையாக மத்தியரசிற்கு சிக்கல்களாகிக் கொண்டிருக்கின்றன. பல பிரச்சினைகள் மத்தியரசிற்கு தெரியாமலேயே திரைமறைவில் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் மத்தியரசு சமாளித்தே ஆக வேண்டும் இல்லையேல் தனது ஆட்சிக் காலத்தை தொடர்வதும் நடத்துவதும் மிகுந்த இடர்பாடுடையதாகவே இருக்கும் என்பதில் சந்தேகமிருக்கப் போவதில்லை. ஏற்கனவே எதிாக்கட்சிகள் ஊழல் அமைச்சர்களை பதவி நீக்கம் செய்யக் கோரி இரு அவைகளையும் முடக்கி வருகின்றன. இதனால் நாட்டின் நலன் குறித்து இரு அவைகளிலும் ஆளும் கட்சி விவாதிக்கவோ முடிவெடுக்க முடியாமலோ திண்டாடி வருவது தெரிந்ததே!

அதுமட்டுமன்றி மத்தியரசிற்கு உறுதுணையாக இருக்கும் மார்க்சிஸ்ட்,கம்யூனிஸ்ட் கட்சிகளோ நாளாந்தம் ஏதோ ஒரு விடயத்தினை பிரச்சினையாக்கத் தவறுவதில்லை பெற்றோல் விலையுயர்வு, காஸ்விலையேற்றம் என்று விவாதம், ஆர்ப்பாட்டம் என்று மத்தியரசிற்கு வெளிப்படையாகச் சிக்கலை ஏற்படுத்தி வந்துள்ளன.

தற்போது மறை முகமாகவும் இக்கட்சிகள் மத்தியரசிற்கெதிராக செயபற்பட்டுக் கொண்டிருப்பதாக தகவல்கள் வெளியாகத் தவறவில்லை.

கட்சி மாநாடு நடத்தியமைதான்! அதில் எதிரொலித்த பிரதான கோஷம் மத்தியரசை உலுக்காமல் இருக்க வாய்ப்பில்லை என்று தான் கூறவேண்டும்

கடந்த மாதம் மார்க்சிஸ்ட் மாநாடு ஒன்று ஆறு நாட்கள் நடைபெற்றது. இதில் 27 நாடுகளிலிருந்து பிரபல கம்யூனிஸ்ட் தலைவர்கள் கலந்து கொண்டிருக்கின்றனர். இந்த மாநாட்டில் விசேட செய்தி கட்சித் தலைமையில் ஏற்பட்டுள்ள மாற்றம் பற்றியது என்று கூறப்பட்டாலும் மூன்றாவது அணி கோஷமே பிரதானமானதாக எதிரொலித்துள்ளமையும் கசிந்திருக்கின்றது.

அதுமட்டுமன்றி கட்சியின் பொதுச் செயலாளராக பிரகாஷ் காரத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். கட்சி இனிவரும் காலங்களில் தெரிவுகளில் எப்படிப் பயணிக்க வேண்டும் என்பது குறித்தும் விவாதிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் தொழில் துறை என்றாலும் விவசாயமென்றாலும் பாரதிய ஜனதாகட்சி போன்றேதான் காங்கிரஸ்கட்சியும் மத்தியில் செயற்படுவதாக குற்றச்சாட்டு எழுப்பட்டிருக்கின்றது. அத்துடன் இப்படி கஷ்டமான சூழல்களுடன் மத்தியரசிற்கு ஆதரவு அளிக்கத்தான் வேண்டுமா.... எனும் வினா பிரதானமானதாக எழுப்பப்பட்டிருக்கின்றது. அது மட்டுமன்றி மார்க்சிஸ்ட் கட்சியின் அரசியல் கொள்கையினை முழுமையாகக் காப் பாற்ற வேண்டுமானால் மூன்றாவது அணி அமைப்பதுதான் சிறந்தது என்று அதிரடி ஆலோசனை கூட வழங்கப்பட்டிருக்கின்றது.

ஆனால் மாநாட்டில் இந்தக் கருத்து வலுப் பெறவில்லையே தவிர வலுவிழந்து போய்விட்டதாக கூறிவிடமுடியாது. ஏனெனில் மூன்றாவது அணி என்பது பாரதிய ஜனதா கட்சிக்கு சாதகமாகிவிடும் என்பதனால் ஐக்கிய முற்போக்கு கூட்ணியரசு நமது கோரிக்கைகளை

ஐக்கிய முற்போக்கு கூட்டணியரசு நிறைவேற்றாது போகும்போது அடுத்த மாநாட்டில் மூன்றாவது அணி பற்றி முடிவு செய்வோம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆனால் மூன்றாவது அணி குறித்து வெளிப்படையாக மார்க்சிஸ்ட் கட்சியினர் விவாதிக்காது போனாலும் கூட தேசியளவில் மூன்றாவது அணி அமைக்கும் முயற்சிகளில் படு தீவிரமாக செயற்படுவதாக கணிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று பாரதிய ஜனதா கூட்டணியில் அங்கம் வகிக்கும்




மம்தா

கட்சிகள் பல சந்தர்ப்பம் கிடைக்குமானால், கட்சியிலிருந்து விலகிவிடவே தயாராகவிருப்பதாக கவனிக்கப்பட்டிருக்கின்றது. அதுமட்டுமன்றி மூன்றாவது அணி ஒன்று உருவாகுமானால் இக்கட்சிகள் 'லபக்' கென்று அதனைப்பற்றிக் கொள்ளத் தயாராகவே இருக்கின்றன.

இவற்றிற்கு நல்ல உதாரணம் ஏற்கனவே பாரதிய ஜனதாவிலிருந்து வெளியே வந்துவிட்டிருக்கும் திரிணாமுல் காங்கிரஸ் மம்தா பானர்ஜி தெலுங்குதேசம் சந்தரபாபு நாயுடு ஆகியோர் இந்திய அரசியலில் எப்போது மூன்றாவது அணி உருவாகும் என்று ஓடு மீன் ஓடி உறுமீனுக்காய் காத்திருக்கின்றனர் என்பது வெளிப்படை.

இதேபோன்று தான் தமிழகத்தில்

சந்திரபாபு நாயுடு முதலானவர்கள் கருணாநிதியை சந்திருக்கின்றனர். இந்த சந்திப்பு சம்பவமா.... அரசியல்



சோனியா

மன்மோகன்சிங்

சரித்திரத்திற்கு அடி கோலா.... என்பது புரியாத புதிராக இருக்கின்றது.

காலத்திற்கு காலம் மூன்றாவது அணி பற்றி சலசலப்பு ஏற்படுவது வழமை ஆனால் அது தண்ணீர் பட்ட நெருப்பாய் அணைந்தும் போயவிடுவது சாதாரண விடயம் அந்த வகையில் ஏற்கனவே தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மிகவும் விறுவிறுப்பாக மூன்றாவது அணி குறித்து பேசியமை யாவரும் அறிந்த ஒன்று.

அதே போன்றுதான் இப்போதும் மூன்றாவது அணி மாயை தோற்றுவிக்கப்பட்டிருக்கக் கூடும் அதிலும் தி.மு.க தலைவர் கருணாநிதி அவ்வாறு ஒரு மாயை வலையினை தோற்றுவித்துள்ளார் என்று கூடக் கூறலாம். இதற்கான தேவை அவருக்குண்டு எனக் கருத இடமுண்டு.

அதாவது அமைச்சரவையினை மாற்றியமைக்கப் போவதாக அண்மையில் சோனியா காந்தி கூறியிருந்தார் அல்லவா.... அதிலும் குறிப்பாக தி.மு.க வினரது அமைச்சுப் பதவிகளிலேயே மாற்றம் நிகழவுள்ளதாக அரசல் புரசலாக பேசப்பட்டது. இதனையடுத்து தி.மு.க தலைவர் மூன்றாவது அணி புரளியைக் கிளப்பியிருக்க வேண்டும் என்று நம்பப்படுகின்றது "சோளியன் குடுமி சும்மா ஆடாது" என்பது போன்று தனது அமைச்சுப் பதவிகளை தக்க வைத்துக் கொள்வதற்

வேறாது போகும் போதே இக்கட்சிகள் மூன்றாவது அணி குறித்துச் சிந்திக்கின்றனர் அதனை ஏற்படுத்துவதில் கங்கணம் கட்டுகின்றன.

எனவே எதிர்க்கட்சிகளை சமாளிப்பதா... தனது கூட்டணி கட்சிகளைத் திருப்திப் படுத்துவதா.... என்பது மத்தியரசிற்கு திண்டாட்டமாகவேதான் இருக்கப் போகின்றது. என்பதில் துளியும் சந்தேகமெழ வாய்ப்பில்லை.

இதேவேளை காங்கிரஸ் கூட்டணி தனது ஒருவருட சாதனைகளை பட்டியல் படுத்த வேண்டிய தேவையும் இருக்கின்றது. இல்லையேல் எதிர்கட்சிகள் உண்டு..... இல்லை... என்று ஆக்கிவிடத் தவறமாட்டாது.

ஏற்கனவே ஐக்கிய முற்போக்கு கூட்டணி சாதனைகளை பட்டியலிடக்

அ.கலைவாணி

கூடாது எனபது போன்று தான் எதிர் கட்சிகள் தொட்டதெல்லாம் குற்றமென்று நின்றுள்ளமையும் தெளிவு.

அதேவேளை ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சிக்கு வந்த சூட்டோடு செயற்படத் தொடங்கிய வேகம் போகப் போக குறைந்து விட்டதா.. குறைக்கப்பட்டதா... அதனால் தான் எதனையும் சாதிக்க முடியாமல் திணறுகிறதா....... எனும் வினாக்களும் இல்லாமலில்லை.

எது எப்படியோ.... மூன்றாவது அணி என்பது இந்திய அரசியலில் உருவானாலும் உருவாகும் எனும் எதிர்பார்ப்பே அதிகமாக எதிரொலிக்கின்றது. என்பதை யாராலும் மறுக்க முடியாது.




# வெற்றிக்கு ஏங்கும் அணியாக...

**ஜாம்பவான்களால்** நிரம்பிய அணியாக வலம் வந்த மேற்கிந்தியதீவு அணியின் நிலைமை இப்போது பரிதாபமாகவுள்ளது. தொடர் தோல்விகளால் கிரிக்கெட் உலகின் சேவகனாக அந்த அணி மாறிக் கொண்டிருக்கிறது.

கிரிக்கெட் வரலாற்றில் மேற்கிந்திய தீவை பொறுத்த வரையில் 1970-1980 காலப் பகுதியில் அசைக்க முடியாத அணி



டாம் மைக்கல் கோல்டிங், ஜோயல் கார்னர், மல்கம் மார்ஷல், அன்டி ரொபட்ஸ் என்று வேகப்புயல்கள் ஆட்சி செய்த அணி. ஒவ்வொரு வரும் வித்தியாசமான முறையில் பந்துவீசி எதிரணி வீரர்களை மிரட்டுவர். சுழல்பந்து வீச்சுக்கு லான்ஸ் கிப்ஸ், வேரி கோம்ஸ், ரிச்சர்ட்ஸ் என தரமான சுழல் பந்து வீச்சாளர் வரிசை.

இப்படியாக ஜாம்பவான்களாக வலம் வந்தவர்கள் சீரான இடைவெளியில் கிரிக் கெட்டிலிருந்து ஓய்வு பெற்றனர். இதன் பின்னர் மேற்கிந்தியதீவுக்கு இது வரை கிரீனிட்ஸ்-ஹெயின்ஸ் ஜோடி போன்ற ஆரம்பதுடுப்பாட்டக் காரர்கள் கிடைக்கவேயில்லை.

இடைநிலை ஆட்டக்காரர்களில் இப்போது முறைதவறான தாகவுள்ள தாக தெரி விக்கப்ப டுகிறது. இதற்கு உள்ளூர் போட்டி கள் தர மானதாக இல்லையாம். இதனால் கிரிக்கெட்டின் முக்கிய மான மூன்று துறைகளும் மோசமாகவுள்ளதாம். (துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு) இதே நிலை நீடித்தால் அங்கு கிரிக்கெட் அழியும் நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என எச்சரிக் கப்படுகிறது.

பந்து வீச்சில் ஏகப்பட்ட வேகங்கள் வந்து போனாலும் ஒருவர் கூட அணிக்கு நம்பிக்கை அளிக்கும் விதத்தில் இல்லை. மற்றும் இது வரை சிறந்த சுழல்பந்து வீச்சாளரைக்கூட இனம் காணமுடியவில்லை.

அத்துடன் துஜான், ஜேக்கப்சுக்கு பின்னர் நல்ல விக்கெட் காப்பாளர் அணிக்கு கிடைக்கவேயில்லை.

எனவே மேற்கிந்தியதீவு அணிக்கு இப்போது நீண்ட நேரம் யாக வலம் வந்தது. காரணம் அது அடுத்தடுத்து இரண்டு முறை உலகக் கிண்ணத்தை கைப்பற்றியதைக் குறிப்பிடலாம்.

அப்போது துடுப்பாட்டத்தில் ஹெய்ன்ஸ், கிரினீட்ஜ், லொயிட், சோபர்ஸ், ரிச்சட்ஸ், கிரிபித், களிச்சரண், லோகி, துஜான் என்று வலுவான துடுப்பாட்ட வரிசை அந்த அணியில் இருந்தனர். இவர்களில் யாரையும் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழக்கச் செய்வது அபூர்வமாகவே நடக்கும்.

ஹெயின்ஸ்-கிரினீட்ஸ் ஜோடிக்கு இணையான ஆட்டக்காரர்களை இப்போது பார்க்கவே முடியாது. எப்படி ஆட வேண்டும் என்று பாடமே நிகழ்த்துவார்கள்.

ஒருவர் நிதானமாக ஆடினால் மற்றவர் அடித்து ஆடி ஓட்டங்களைக் குவிப்பார். தொடக்கத்தில் இவர்கள் வலுவான ஓட்டங்களைக் குவிக்கும் போது பின்னுக்கு வருபவர்களுக்கு எந்தப் பிரச்சினையும் இருக்காது. இதனால் அணியின் ஓட்டக்குவிப்பு சிறப்பாக இருக்கும்.

பந்து வீச்சில் கேட்கவே வேண் லாறாவைத் தவிர யாரையும் நம்ப முடியவில்லை. மற்ற வீரர்கள் பயிற்சிப்போட்டி போன்று விளையாடி விட்டுச் செல்கின்றனர். இதற்கு உதாரணமாக கடைசியாக பதின்மூன்று ஒரு நாள் போட்டியில் விளையாடியுள்ள மேற்கிந்தியதீவு பதினொரு போட்டிகளில் தோல்வியைத் தழுவியதைக் குறிப்பிடலாம்..

ஏன் இந்த நிலைமை வருந்தத்தக்கதே அதற்காக தற்போதைய மேற்கிந்திய அணியை சும்மா குறைத்து மதிப்பிடமுடியாது ஏனெனில் கெய்ல், ஹிண்ட்ஸ், லாறா, சர்வான், சந்தர்போல், டிவெய்ன் ஸ்மித், ரிக்கார்டோ பவுல் என நல்ல துடுப்பாட்ட வீரர்கள் அணியில் உள்ளனர். இப்படியான வீரர்களை வரிசையாக வைத்துக் கொண்டு தோல்வியைத் தழுவுவதுதான் ஆச்சரியமாகவுள்ளது.



இதற்கு வீரர்களின் பந்துகளைத் தேர்வு செய்யும் களத்தில் நின்று ஆடும் திறன், வெற்றிக்காக சிந்தித்து செயற்படுவது, தரமான துடுப்பாட்ட, பந்து வீச்சு பயிற்சி, பந்துகளைத் தேர்வு செய்யும் முறை போன்றவற்றை இனிவரும் காலங்களிலாவது சிந்தித்து செயற்படுத்தினால் மீண்டும் இந்த அணி கிரிக்கெட்டில் வளர்ச்சி பெறும்.

தவறுகளை திருத்திக் கொண்டு பழைய அணியாக வலம் வர வேண்டாம். குறைந்தபட்சம் வெற்றிகளைப் பெறும் அணியாக மேற்கிந்தியதீவு மாறட்டுமேன்.

# சவால்மிகு தொடர்

**உலகின்** முன்னணி வீரர்களுக்கு சவால்விடும் ஒரே கிராண்ட்ஸ்லாம் தொடரான பிரெஞ் ஓபன் தொடர் ஆரம்பமாகிவிட்டது.

அவுஸ்திரேலிய ஓபன், விம்பிள்டன், அமெரிக்க ஓபன் ஆகிய மற்ற கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் பெரும்பாலும் முதல் ஐந்து இடங்களுக்குள் இருக்கும் வீரர்களே இறுதிப்போட்டிக்கு முன்னேறுவர்.



ஆனால் பிரெஞ் ஓபனில் இது முற்றிலும் தலைகீழ் களிமண் களமான இங்கு எல்லா வீரர்களாலும் சிறப்பாக விளையாடிவிடமுடியாது. முன்னணி வீரர்கள் கூட திணறிவிடுவார்கள். யார் வெல்வார்? யார் தோற்பார் என்று கணிப்பது கடினம். முதல் நிலையில் இருப்பவர் கூட இங்கு தோல்வி அடைவது சகஜம். டென்னிஸ் உலகின் தலைசிறந்த வீரராக கருதப்படும் அமெரிக்காவின் பீட் சாம்பிரஸ் இங்கு ஒருமுறை கூட பட்டம் வென்ற தில்லை.

தற்போது சாம்பிரசுக்குப் பின்னர் அசைக்க முடியாத வீரராக வளர்ச்சி கண்டுள்ளார் சுவிற்சர்லாந்தின் ரோஜர்பெரடர் அனைத் துத் தொடர்களிலும் வெற்றிவாகை சூடினார். இவரது வெற்றிப் பயணத்துக்கு கடந்த ஆண்டு பிரெஞ் ஓபன் ஒரு பின்னடைவு கொடுத்தது.



இவர் மூன்றாவது சுற்றில் அதிர்ச்சித் தோல்வியடைந்தார். முதல் நிலை வீரருக்கு இந்த நிலை என்றால் மற்ற வீரர்கள் கேட்கவா வேண்டும். நடப்பு சம்பியன் என்ற பெருமையோடு இறங்கிய ஜஸ்ரின் ஹெனின் (பெல்ஜியம்) இரண்டாவது சுற்றில் வெளியேறினார்.

இப்படி முன்னணி வீரர்கள் பலரும் தோல்விப்பட்டியலில் இடம்பெற யாருமே எதிர்பார்க்காத ஆர்ஜன்டினாவின் கஸ்டன் காடியோ சம்பியன் பட்டம் வென்றார். பெண்கள் பிரிவில் ரஷ்யாவின் அனஸ்டாசிய, மிஸ்கினா, சம்பியானார். 107 ஆண்டு கால டென்னிஸ் வரலாற்றில் கிராண்ட்ஸ்லாம் தொடரில் சம்பியன் பட்டம் வெல்லும் முதல் ரஷ்ய வீராங்கனை என்ற சாதனையையும் படைத்தார்.

இந்த நிலையில் தவறவிட்ட பட்டத்தை இம்முறை கைப்பற்ற வேண்டும் என்ற நிலையில் களமிறங்குகின்றார் ரோஜர் பெரடர். அவர் இதில் சம்பியன் பட்டம் பெறின் அனைத்து கிராண்ட்ஸ்லாம் பட்டங்களையும் வென்ற வீரர் என்ற பெருமையைப் பெறுவார்.

# மகத்தான பணி

**விளையாட்டுத்** துறையில் பயிற்சியாளரின் பங்கு மகத்தானது. ஒரு அணி அல்லது வீரரின் வளர்ச்சி இவரையே பெரிதும் சார்ந்துள்ளது.



இந்த வகையில் வீழ்ச்சிப் போக்கில் உள்ள அணி ஒன்றுக்கு புதிய பயிற்சியாளர் நியமனம் என்பது மிகமிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றது.

அந்த வகையில் மோசமான தோல்வி ஒன்றின் பின்னால் இந்திய கிரிக்கெட் அணிக்கு 57 வயதான கிறேக் ஷப்பல் நியமனம் பெற்றுள்ளார்.

நேர்முகப் பரீட்சைக்காக இந்தியா வந்த சமயம் டெல்லி விமான நிலையம் ஊடகவியலாளர்களால் நிரம்பி வழிந்தது. எனினும் இவர் 2000 ஆம் ஆண்டு பயிற்றுநர் பதவிக்கு வருகை தந்து ஜோன் ரைட்டிடம் தோல்வியடைந்த போதும் மீண்டும் அந்த பதவிக்கு வருவதாக தெரிவித்தார். அதே போன்று ஷப்பலுக்கு வாய்ப்பும் கிடைத்துள்ளது. இவரது பரம்பரையில் ஒரு சிறந்த துடுப்பாட்டக் காரராகக் கருதப்படும் இவர் அண்மையில் பாகிஸ்தானுடன் நடை பெற்ற போட்டியில் இந் திய அணி தோல்வியை சந்தித்திருந்தாலும் இவரது பயிற்சியின் மூலம் அணிக்கு வெற்றியைப் பெற்றுத்தர முயற்சி செய்வார். இவர் இவருடன் போட்டிக்கு நின்ற ரொம் மோடி, டெஸ்மன் கெய்ன்ஸ், மொகிந்தர் அமர்நாத் ஆகியோரை வீழ்த்தி பதவியை கைப்பற்றியிருக்கின்றார். இவரது தெரிவு மிகவும் பொருத்தமானதே என இந்தியாவின் முன்னாள் விக்கெட்காப்பாளரான பாருக் என்ஜினியர் கூறியிருக்கிறார். அத்துடன் அண்மையில் இவரைச்சந்தித்த போது அவரை இந்திய அணிக்கு பயிற்று விப்பாளராக வந்தால் மிகவும் நல்லது. என்றும் கூறியிருக்கிறார். தற்போது இவர் பதவியேற்ற செய்தி மிகவும் பெருமையளிப்பதாக தெரிவித்திருக்கின்றார்.

பாகிஸ்தானுடனான தொடரை இந்தியா இழந்ததை இந்திய ரசிகர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். கிறேக்கிடம் நல்ல திறமையும் அறிவும் காணப்படுகிறது. மக்கள் அவரை அதிகம் மதிப்பார்கள். அவருக்கு எந்தவிதமான அழுத்தமும் இங்கு இருக்காது என்றெல்லாம் எனஜினியர் குறிப்பிட்டுள்ளார்.

ஷப்பல் அவுஸ்திரேலியா கவுண்டி அணிகளின் பயிற்றுநராகவும் பாகிஸ்தானின் பயிற்சிக்கல்லூரியில் ஆலோசகராகவும் பணி புரிந்துள்ளார். திறந்த மனத்துடன் புதிய பயிற்சிகள் வழங்கப்படும் போது அது எக்காலத்திலும் மறக்க முடியாதவை என அவர் தனது வாசகத்தில் குறிப்பிடுகிறார்.

ஷப்பல் பற்றி குறிப்பிடும் அவரது சக வீரர் கிறேக் பிலிவெட் அவரின் ஆட்டத்தின் பிரகாசம் அவர் ஆடும் போது தெரியும் என்றும் நவீன விளையாட்டின் தரத்துக்கேற்ப ஒவ்வொருவரையும் பயிற்றுவிப்பது எவ்வாறு என்பதும் அவருக்குத் தெரியும் எனக்கூறியுள்ளார். இவரின் வருகை பாகிஸ்தான் அணியுடனான தொடரில் துவண்டு போயிருக்கும் இந்திய அணிக்கு மிகப் பொருத்தமான நேரமாகும்.

அந்த நல்ல நேரம் வரும் ஆகஸ்ட் மாதம் இலங்கையில் நடைபெறும் முக் கோணத் தொடரில் வெளிப்படுமா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

## வாய்ப்பு இழந்தவர்கள்...



மொகிந்தர் அமர்நாத் (இந்தியா) | டொம் மோடி (அவுஸ்திரேலியா) | ஹெய்ன்ஸ் (மேற்கிந்தியத்தீவு)

# சனாதிபதி ஜே.வி.பியுடன் இணைந்து நாடகமாடுகிறார்

# தமிழர்கள் சொந்தக்கால்களில் நிற்க தயாராகவேண்டும்

### -பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் தெரிவிப்பு

(கொழும்பு)

சனாதிபதியும், ஜே.வி.பியும் நாடகமாடிக் கொண்டு தமிழினத்தை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இதில் தமிழ் மக்கள் ஒரு போதும் ஏமாறக்கூடாது. இவ்வாறு மகிழடித்தீவு கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு சனிக்கிழமை இடம் பெற்ற கலை நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் உலக நாடுகளுக்கும், உதவி வழங்கும் நாடுகளுக்கும் சுனாமிக் கட்டமைப்பு ஏற்படுத்தத் தான் சம்மதம் என்பதை சனாதிபதி வெளிக்காட்டியுள்ளார்.

உண்மையில் இது வெறும் போலி வார்த்தை ஏனெனில் சனாதிபதிக்கும், ஜே.வி.பிக்கும் முரண்பாடுடுள்ளதாகக் கூறப்படுகிறது. உண்மையான முரண்பாடு காணப்படுமானால் சுனாமிப் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக சனாதிபதி தெரிவித்த மறுகணமே ஜே.வி.பி ஆளும் கூட்டு முகாமிலிருந்து வெளியேறியிருக்கும். எதுவுமே நடைபெறவில்லை. இதில் இருந்து ஒன்று தெளிவாகத் தெரிகிறது.

சனாதிபதி நாடகமாடிக் கொண்டிருக்கிறார். இவரது நாடகத்தைக் கண்டு ஏமாறாமல் தமிழ் மக்கள் சொந்தக் காலில் நிற்பதற்கு தயாராக வேண்டும் என்றார்.

### -பொதுக் கட்டமைப்பு குறித்து-

# சனாதிபதி சந்திரிகா ஜே.வி.பி.யுடன் மூன்று சுற்றுப்பேச்சுக்கள் நடத்த முடிவாம்

(கொழும்பு)


பொதுக்கட்டமைப்பு விடயம் தொடர்பில் சனாதிபதி மேலும் மூன்று சுற்றுப்பேச்சுவார்த்தைகளை ஜே.வி.பியுடன் நடத்தவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. பொதுக் கட்டமைப்பை தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஏற்படுத்திக்கொள்வது தொடர்பில் சனாதிபதிக்கு தமது கருத்துக்களை ஜே.வி.பி. முன்வைத்துள்ளது.இதன் அடிப்படையிலேயே ஜே.வி.பியினருக்கும் சனாதிபதிக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஜே.வி.பி. கடந்த காலத்தில் பொதுக்கட்டமைப்பிற்கெதிராக காட்டி வந்த எதிர்பை தொடர்ந்தும் முன்னெடுத்துச்செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஜேவி.பியின் தலைவர் சோமவன்சவின், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைக் காப்பாற்றவேண்டும் என்ற கொள்கை இதற்கு ஒரு காரணமாக அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனடிப்படையிலேயே சோமவன்சவின் தலைமையிலான குழு ஜப்பானின் இலங்கைக்கான விசேட தூதுவர் யசூசி அகாஷியின் அழைப்பை ஏற்று அங்கு விஜயம் செய்துள்ளது. இந்தக் குழு அங்கு ஜப்பானின் நிர்வாக முறை தொடர்பில் தமது அவதானத்தை செலுத்தவுள்ளது. இந்த நிலையில் குறித்த குழு நாடு திரும்பியதும் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் சனாதிபதியுடனான சந்திப்பு இடம்பெறுமெனவும் கூறப்படுகிறது. (32)

# உயர்தொழில்நுட்ப இலத்திரனியல் கண்காட்சியில் முதலிடம் பெற்ற மாணவன் கௌரவிப்பு

(அலுவலகசெய்தியாளர்)

வன்னி தொழில்நுட்பவியல் நிறுவனம் நடத்திய உயர்தொழில்நுட்ப இலத்திரனியல் கண்காட்சியில் முதலாம் இடத்தைப் பெற்ற எலற்றோனிக் டிஸ்பிளே இயந்திரம் செய்த மாணவனுக்கு "சிலிக்கன் வலி விருது" வழங்கப்பட்டுள்ளது.



மேற்படி விருதினை வன்னி தொழில்நுட்பவியல் நிறுவகம் வழங்கியுள்ளது. கடந்தவாரம் நடைபெற்ற உயர்தொழில்நுட்பக்கண்காட்சியில் புதிய கண்டுபிடிப்பினை கண்டு பிடித்து அதனை மக்கள் மத்தியில் வெளிப்படுத்திய இலத்திரனியல் பிரிவு மாணவன் சு.ஜெகஜீவன் றாஜ் என்பவருக்கு அவரது கண்டுபிடிப்பினை ஊக்குவிக்கும் முகமாக ரூபா.50,000 பெறுமதியான சிலிக்கன் வலி விருதினை" வன்னி தொழில்நுட்பவியல் நிறுவகம் வழங்கி கௌரவித்துள்ளது. மேற்படி மாணவன் விழாக்காலங்களில் பெரியதொரு உருளையை வைத்துக் கொண்டு மின்குமிழ்களின் வடிவங்களை மாற்றி அமைக்கும் முறையை தொழில்நுட்ப ரீதியாக மாற்றி மிகவும் சிறியதொரு இலத்திரனியல் உபகரணம் மூலம் மாற்றியமைக்கும் இலத்திரனியல் டிஸ்பிளேயைக் கண்டுபிடித்துள்ளார். (கு)

# எஸ்.பி.திஸாநாயக்கவின் விடுதலைக்காக ஐ.தே.க சனாதிபதியிடம் மன்னிப்பு கோராது

### -ரணிலின் வெற்றியில் நம்பிக்கை

(கொழும்பு)

முன்னாள் சமுர்த்தி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவை விடுவிப்பதற்காக சனாதிபதியிடம் தாம் மன்னிப்புக் கோருவதில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது. எஸ்.பி.திஸாநாயக்கவின் விடுதலை தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொறகொட, சனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்து கலந்துரையாடி, அவருடைய விடுதலைக்கான கோரிக்கை விடுக்கப்படவிருப்பதாக முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது.எனினும், எஸ்.பி.திஸாநாயக்கவை விடுதலை செய்வதற்காக சனாதிபதியிடம் மன்னிப்புக்கோரும் முடிவுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்ததுடன், இது. சனாதிபதியிடம் மன்னிப்புக்கோருவதில்லை என்ற எஸ்.பி.திஸாநாயக்கவின் முடிவுக்கும் முரணானது என்றும் வலியுறுத்தியிருந்தனர். இதனையடுத்து, பாராளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொறகொட சனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்து எஸ்.பி.யின் சார்பில் அவரிடம் மன்னிப்புக்கோரி, அவருடைய விடுதலைக்கான கோரிக்கையை முன்வைப்பது என்ற முடிவை ஐக்கிய தேசியக் கட்சி மாற்றிக்கொண்டுள்ளதாக கட்சி வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது. அடுத்த சனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெற்று சனாதிபதியாவது உறுதி என்பதால், அதன்பின்னர் அவர் தம்முடைய விடுதலைக்கான உத்தரவைப் பிறப்பிப்பார் என்று திஸாநாயக்க நம்பிக்கை கொண்டுள்ளதாகக் கட்சி உயர்மட்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, எஸ்.பி.திஸாநாயக்க வகித்துவந்த ஐக்கிய தேசியக் கட்சியின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளர் பதவிக்கு இன்னமும் வேறு ஒருவர் நியமிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. எஸ்.பி.திஸாநாயக்க விடுதலையாகும் வரையில், பதில் தலைவராகப் பணியாற்றும்படி நவீன் திஸாநாயக்கவிடம் விடுக்கப்பட்ட கோரிக்கையை அவர் நிராகரித்துள்ளார். தற்போது சனாதிபதித் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை ரணில் விக்கிரமசிங்க தீவிரப்படுத்தியிருப்பதால், நுவரெலியா மாவட்டத்துக்கான அமைப்பாளர் ஒருவரை உடனடியாக நியமிக்கவேண்டிய தேவை கட்சிக்கு எழுந்துள்ளதாகவும், அதனால், இரண்டு வருட கடூழியச் சிறைத்தண்டனை அனுபவித்துவரும் எஸ்.பி.திஸாநாயக்கவை அந்தப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு, புதியவர் ஒருவர் அந்தப் பதவிக்கு விரைவில் நியமிக்கப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

### 225 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் விரைவில் சொகுசு வாகனங்கள்

பாராளுமன்ற உறுப்பினர்கள் 225 பேருக்கும் சொகுசு வாகனங்களை உடனடியாக வழங்குமாறு நிதிஅமைச்சர் சரத் அமுனுகம திறைசேரிக்கு உத்தரவிட்டுள்ளார். நாட்டின் பொருளாதார நிலைமை மிகவும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த நிதி ஒதுக்கீட்டை மேற்கொள்ளுமாறு நிதிஅமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

எனினும் முதல் கட்டமாக புதிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகன கொள்வனவு ஒதுக்கீட்டை மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். இந்த வாகனக் கொள்வனவுக்காக ஒதுக்கப்படும் தொகை. 55 கோடி ரூபா என்பது குறிப்பிடத்தக்கது.

# சனாதிபதி சந்திரிகா - ஜே.வி.பி முரண்பாடுகள் பகிரங்கமாகி வருகின்றன

### -ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

சனாதிபதி சந்திரிகாவிற்கும், அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான ஜே.வி.பியினருக்குமிடையில் முரண்பாடு பகிரங்கமாகி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்தில் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தையின் தற்போதைய நிலை தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பீரிஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு நிலையில் இலங்கையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது மிகவும் கடினமானதாகும்.

ஐக்கிய இலங்கை என்ற அடையாளத்திற்குள் தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும்.

அந்த அடிப்படையில்தான் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடாத்தியது.

சனாதிபதிக்கும், ஜே.வி.பியினருக்குமிடையிலான முரண்பாடு அதி கரித்து வருகின்றன, அவர்கள் முதலில் ஒரு இணக்கப்பாட்டிற்கு வருவது அவசியம், அவ்வாறு பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டால் ஒஸ்லோ மற்றும் டோக்கியோ பிரகடனத்தின் அடிப்படையிலேயே அமைய வேண்டுமெனவும் ஜீ.எல்.பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார்.




எட்டாம் ஆண்டு நீங்காத நினைவுடன்...



வீரவேங்கை இளவேந்தன்
(செபஸ்ரியாம் பிள்ளை ஜெயரட்ணம்)

தோற்றம்:17.10.1977
வீரச்சாவு:24.05.1997

ஈழநாடு மீட்டிடவே
இமயமெனச் சென்ற புலியே
இளவேந்தன் எனவாகி-எம்
இதயமதில் பதிந்துவிட்டாய்-உன்
நினைவு சுமந்து நாங்கள் -என்றும்
ஈழமதில் வாழ்ந்திடுவோம்.

உடையார் கட்டு வடக்கு,
உடையார்கட்டு.

தகவல்:
தந்தை, சகோதரர், சகோதரிகள்.

(சி.12008)

# பீகார் சட்டசபை கலைக்கப்பட்டது

# அடுத்த தேர்தல் ஆறு மாதத்திற்குள்

(பீகார்)

**இந்தியாவின் பீகார் மாநில சட்டப் பேரவை கலைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக இந்திய மத்திய அமைச்சரவை செய்த பரிந்துரையை குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் ஏற்றுக்கொண்டுள்ளார்.**

நேற்றுப் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய பீகாரில் எந்த அரசியல் கட்சியாலும் நிலையான அரசை நிறுவ முடியாதநிலை இருப்பதால் சட்டசபையைக் கலைக்க முடிவு எடுக்கப்பட்டது. இதனையடுத்து பீகாரில் ஆறு மாதங்களுக்குள் தேர்தல் நடத்தப்படும் என்று தேர்தல் ஆணையக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. தேர்தல் தொடர்பான அறிவிப்பு விரைவில் முறைப்படி வெளியாகுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேல் இதனை முறைப்படி தெரிவித்தார்.

மத்திய அமைச்சரவையின் இந்த முடிவை குடியரசுத் தலைவர் ஏற்று அதற்கு அங்கீகாரமும் அளித்திருப்பதாக உள்துறை அமைச்சர் கூறினார். பீகார் மாநிலத்தில் ஆட்சி அமைக்க சட்டமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் முயற்சிகள் நடப்பதாக ஆளுநர் பூட்டாசிங்கிடமிருந்து முதலில் ஒரு கடிதம் மத்திய அரசிற்குக் கிடைத்தது என்றும் அதில் சட்டப் பேரவையைக் கலைக்க யோசனை தெரிவிக்கப்படவில்லையென்றும் உள்துறை அமைச்சர் தெரிவித்தார்.

ஆனால், மாநிலத்தில் அரசியல் காரணத்திற்கு எதிரான சட்டவிரோதமான மற்றும் எதிர்பாராத அரசியல் நிகழ்வுகள் நடைபெறுவதாகவும் இதைத் தடுக்கச் சட்டப் பேரவையை கலைக்க வேண்டுமென்று ஆளுநர் பரிந்துரைத்துள்ளதாகவும் சிவராஜ் பட்டேல் தெரிவித்தார்.

முன்னர் நடைபெற்ற மத்திய பீகார் சட்ட சபைத் தேர்தல் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காதமையினால் 243 உறுப்பினர்களைக் கொண்ட சட்ட சபையில் ஆட்சி அமைக்கத் தேவையான 122 உறுப்பினர்கள் ஆதரவு எவருக்கும் கிடைக்காமையினால் ஆட்சி இழுபறி நிலையில் இருந்தவேளை அங்கு சனாதிபதி ஆட்சி அமுல்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.



புதுவையில் பிடிபட்ட போலி ரூபா நோட்டுக் கட்டுக்களை வடக்குப் பகுதி பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரீகாந்த் பார்வையிட்டபோது.

# சர்ச்சைக்குரிய ஹிந்தித் திரைப்படம் வெளியிட்ட திரையரங்குகளில் குண்டு வெடிப்பு

## அறுபது பேர் காயம்

(டில்லி)

டில்லியில் இரண்டு திரையரங்கில் இடம்பெற்ற இருவேறு குண்டு வெடிப்புகளில் ஒருவர் கொல்லப்பட்டார். அச்சமயம் அறுபது பேர் காயமடைந்தனர்.

சர்ச்சைக்குரிய ஹந்தித் திரைப்படம் திரையிடப்பட்டிருந்த லிபர்டி, சத்தியம் ஆகிய இரு திரையரங்குகளில் இடைவேளையின் போதே இக்குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு எட்டு மணியளவில் லிபர்டி திரையரங்கில் குண்டு வெடிப்பு ஏற்பட்டு அடுத்த 15நிமிடங்களில்இந்தத் திரையரங்கில் இருந்து மூன்று கிலோ மீற்றர் தொலைவிலுள்ள சத்தியம் பிலிம்ஸ் திரையரங்கில் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது. இந்தச் சம்பவங்களுக்கு இதுவரை எவரும் பொறுப்பேற்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், இதில் தீவிரவாதிகளின் பின்னணி இருக்குமென டில்லி காவல்துறையினர் சந்தேகம் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவங்களை அடுத்து நாடு முழுவதும் உசார்ப்படுத்தப்பட்டு பாதுகாப்பு அளிக்கப்பட்டது. இரவுக் காட்சிகள் இரத்துச் செய்யப்பட்டன. இச்சம்பவம் இடம்பெற்ற இடங்களை டில்லி முதலமைச்சர், மத்திய உள்துறை அமைச்சர் ஆகியோர் பார்வையிட்டனர். இக்குண்டு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பாக காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி கவலை தெரிவித்துள்ளார். சட்டம், ஒழுங்கு நிலையைப் பராமரிக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு டில்லி ஆளுநரையும், முதலமைச்சரையும் சோனியாகாந்தி கேட்டுக்கொண்டார். யூகேரிபோ நீகார் மேலும் சிலர் எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்து இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. இதையடுத்து மும்பை, குஜராத் மாநிலங்களில் இந்தத் திரைப்படம் திரையிடப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. பஞ்சாப், சண்டிகர் மாநிலங்களில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க நேற்றுக் காலை வட-கிழக்கு டில்லியில் ரயில்வே அருகிலும் குண்டொன்று வெடித்துள்ளது. கீழே கிடந்த கைப்பை ஒன்றை ஒருவர் எடுத்து திறந்து பார்த்தபோது அதில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததாகவும் இதனால், குறித்த நபரின் முகங்களில் காயம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



# பிரதமராகும் தகுதி தனக்கு இல்லையென்கிறார்

## இராணுவ அமைச்சர் பிரணாப்முகர்ஜி

எனக்கு பிரதமராக வேண்டும் என்ற ஆசையெல்லாம் இல்லை.

அதற்கெல்லாம் மிகப் பெரிய அளவில் மக்கள் செல்வாக்கு வேண்டும். நாடு முழுவதும் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். எனக்கு இந்த இரண்டு தகுதிகளுமே இல்லையென இந்திய இராணுவ அமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறினார்.

டில்லியில் நேற்று முன்தினம் தனியார் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டியளித்தபோதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், காங்கிரஸ் கூட்டணி அரசு பதவியேற்று ஓராண்டு காலம் நிறைவடைந்துள்ளது. இந்த ஓராண்டு காலத்தில் கூட்டணி அரசு, அரசியல் ரீதியாக மிகச் சிறப்பாகப் பணியாற்றியுள்ளது. பிரதமர் மன்மோகன்சிங்கும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி தலைவர் சோனியாவும் இணைந்து செயற்பட்டு வருகின்றனர். அதன் பிரதிபலிப்பு கடந்த ஓராண்டு கால சாதனையில் தெளிவாகத் தெரிகிறது. ஜாதி, மத மோதல்களால் நாட்டில் கடந்த காலங்களில் ஏற்பட்ட பதற்றத்தைக் குறைத்து இருக்கின்றோம். இதுவரை காங்கிரஸ் தனிப்பெரும்பான்மையைப் பெற்றே ஆட்சியில் அமர்ந்திருந்தது. கூட்டணிக் கட்சிகளுடன் இணைந்து அரசு அமைத்து இருப்பது இதுதான் முதல்முறை. இது எங்களுக்குப் புதிதும்கூட. தன்னுடைய தலைமையிலான அரசின் செயற்பாடுகள் குறித்து பிரதமர் பத்திற்கு ஆறு மதிப்பெண்கள் கொடுத்துள்ளார். இது பிரதமர் தனக்குத்தானே போட்டுக் கொண்ட மதிப்பெண் ஆகுமெனவும் கூறிய அவர்,

எதிர்காலத்தில் பிரதமராகும் ஆசையெல்லாம் எனக்குக் கிடையாது. அதற்கெல்லாம் மிகப் பெரிய மக்கள் செல்வாக்கு வேண்டும். நாடு முழுவதும் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். எனக்கு இந்த இரண்டு தகுதிகளுமே இல்லை. என்னால், இந்தி மொழியை செம்மையாகவும், தெளிவாகவும் பேசமுடியாது. இந்தி மொழி தெரியாமல் ஒருவர் பிரதமராக வருவது மிகவும் கடினம். எனவே, என்னைப் பிரதமராக ஒருபோதும் நீங்கள் பார்க்க முடியாது எனவும் அவர் மேலும் கூறினார்.



கேசவன் புத்தன்துறை கடற்கரைப் பகுதியிலுள்ள வீடுகளைக் கடலலையிலிருந்து பாதுகாக்க மணல் மூடைகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ள காட்சி.

# குறைந்த பட்ச பொதுசெயல் திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசுக்கு தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குவதாக

## –கம்யூனிஸ்ட் தலைவர்கள் உறுதி

ஏழை மக்களின் விருப்பத்திற்கிணங்க குறைந்த பட்ச பொது செயற்திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசுக்கு தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குவோம் என பிரதமர் மன் மோகன் சிங்கிற்கு கம்யூனிஸ்ட் தலைவர்கள் கடிதம் மூலம் உறுதி அளித்துள்ளனர். இதனால் வரும் ஆண்டுகளில் மத்திய அரசுக்கு ஆபத்தில்லை என்று மறைமுகமாக தெளிவுபடுத்தியுள்ளனர்.

ஐ.மு.கூட்டணி ஆட்சியின் ஓராண்டு நிறைவு விழா பிரதமர் மன்மோகன்சிங் இல்லத்தில் நேற்று முன்தினம் நடந்தது. ஆளும் கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் இதில் பங்கேற்றனர். ஆதரவுக்கட்சியான கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்து பிரதமர் மன்மோகன்சிங்கடிதம் எழுதினார். அதற்குப் பதிலளித்து கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர்கள் தனித்தனியே பதில் கடிதங்கள் எழுதினர். மார்க்சிஸ்ட் பொதுச்செயலர் பிரகாஷ் காரத் எழுதிய கடிதத்தில் ஏழைமக்களின் எதிர்பார்ப்புக்களின் படி வரும் ஆண்டுகளில் குறைந்த பட்ச பொதுச்செயற் திட்டத்தை நிறைவேற்ற தொடர்ந்து மத்திய அரசுக்கு ஆதரவளிப்போம் என்றார். இதே கருத்தை வலியுறுத்தி மார்க்சிஸ்ட் முன்னாள் பொதுச் செயலர் சுர்ஜித் தேசிய செயலர் சீதாராம் யெச்சூரி ஆகியோரும் கடிதம் எழுதினர்.

இந்திய கம்யூனிஸ்ட் பொதுச் செயலர் பரதன் தேசிய செயலர் ராஜா ஆகியோர் கூட்டாக எழுதிய கடிதத்தில் ஏழைகளீ உழைக்கும் மக்கள் நலன்கருதி குறைந்த பட்ச பொது செயற்திட்டத்தை இன்னும் தீவிரமாக அமுல்படுத்துவீர்கள் என நம்புகிறோம். இது பற்றி கடந்த 18 ஆம் திகதி நாம் விரிவாக விவாதித்து இருக்கிறோம் மத்திய அரசுக்கு எங்கள் ஆதரவு தொடரும் என்றனர். பார்வார்டு பிளாக் பொதுச்செயலர் பீஸ் வாஸ், புரட்சிகர சோசலிசக் கட்சித்தலைவர் அபனி ராய் ஆகியோரும் இதேபோன்ற கடிதங்களை பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு எழுதி உள்ளனர்.



திருச்செந்தூரில் கோவில் பகுதியை அண்மித்த கடலில் நேற்றுக் காலை எட்டு மணியளவில் கடல்நீர் சுமார் 25 அடி தூரத்துக்கு உள்வாங்கியது. இரண்டு மாதத்திற்கு முன்பு திருச்செந்தூர் கடல் உள்வாங்கியது இப்போது மூன்றாவது தடவையாகவும் கடல் நீர் உள்வாங்கியுள்ளன.

# கெய்ல்ஸின் சதம் வீணானது
# மே.தீவுக்கு மீண்டும் தோல்வி



மேற்கிந்தித்தீவுக்கு சுற்றுலாவை மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி அந்நாட்டுக்கெதிரான மூன்று ஒரு நாள் போட்டியிலும் வெற்றி பெற்று தொடரை 3-0 என்று முழுமையாக கைப்பற்றியது.

செயின்ட் லூசியாசில் நேற்று முன்தினம் நடந்த மூன்றாவது போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் ஆரம்பமே அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தது.



அணித் தலைவர் இன்சமாம் இப்போட்டியில் காயம் காரணமாக ஆடவில்லை. இவருக்குப் பதிலாக களமிறங்கிய பசீத்ஹான் 66 ஓட்டங்களைக் குவித்தார். இவரே அதிகபட்ச ஓட்டங்களைச் சேர்த்தார். அடுத்து யுகானா 50, யூனிஸ்ஹான் 40, சல்மான்பட் 41 ஓட்டங்களையும், அக்மல் ஒன்பது பந்துகளில் ஆட்டமிழக்காது 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

இதன் மூலம் பாகிஸ்தான் நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் ஆறு விக்கெட்டுக்களையிழந்து 303 ஓட்டங்களைப் பெற்றது.

பந்து வீச்சில் பிரட்சோவ், கெலிமோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். 304 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி பெறலாம் என்ற கடின இலக்குடன் களமிறங்கிய மேற்கித்தியத்தீவு தொடக்க வீரர் கெய்ல்ஸ் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தபோதும், எதிர்முனையில் நின்றவர்களால் தாக்குப்பிடிக்க முடியாததால் 49.3 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 281 ஓட்டங்களைப் பெற்று 22 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது. பந்து வீச்சில் அப்துல் ரசாக் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

கெய்ல்ஸ் 124 ஓட்டங்களையும், ஹிண்ட்ஸ் 35 ஓட்டங்களையும், சந்தர்போல் 33 ஓட்டங்களையும் முறையே அதிகபட்சமாகப் பெற்றனர். இத்தோல்வி மூலம் மினி உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றிய மேற்கிந்தியத்தீவு அணி அதன் பின் 13 ஒரு நாள் போட்டிகளில் பற்கேற்று 12 போட்டிகளில் தோல்வியடைந்துள்ளது. இரு அணிகளுக்குமிடையிலான இரண்டு போட்டி கொண்ட டெஸ்ட் தொடர் நாளை மறுதினம் ஆரம்பமாகின்றது.

# 18 வயதில் காட்டியதை 30 வயதில் காட்டமுடியாது
## சச்சின் தொடர்பில் சந்தேகப்படுகிறார் ஷப்பல்



"வயதானால் ஆட்டமுறையும் மாறும். 18 வயதில் சச்சின் விளையாடியதை 30 இல் ஒப்பிட்டுப் பார்க்கக் கூடாது. அவரால் மீண்டும் பழைய ஆட்டத்தை வெளிப்படுத்த இயலாது" என சந்தேகம் தெரிவிக்கிறார் இந்தியப் பயிற்சியாளர் கிரெக் ஷப்பல்.

கிரிக்கெட் அரங்கின் சாதனை நாயகனான சச்சின் டெஸ்டில் 10,134 ஓட்டங்களையும், ஒரு நாள் போட்டியில் 13,642 ஓட்டத்தையும் குவித்துள்ளார். ஆனாலும், சமீபகாலமாகத் துடுப்பாட்டத்தில் மந்தமாகச் செயற்படுகிறார். ஆட்டத்தில் முந்தைய வேகத்தைக் காணமுடியவில்லை.

இதுபற்றி 'தி' சிட்னி ஹெராால்ட்' பத்திரிகையில் கிரெக் ஷப்பல் கூறியிருப்பதாவது,

கடந்த 15 ஆண்டுகளாக உலகின் சிறந்த துடுப்பாட்ட வீரராகச் சச்சின் திகழ்கிறார். சில போட்டிகளில் பிரகாசிக்கத் தவறினார். இது கிரிக்கெட்டில் சகஜம் தான். இவரால் பழைய ஆட்டத்தை வெளிப்படுத்த இயலாது. 30 வயதுக்கு ஏற்ப தான் விளையாட முடியும். அவ்வப்போது ஏற்பட்ட காயமும் ஆட்டத்தைப் பாதித்துவிட்டது. அணியில் தனது பங்கு குறித்தும் சிறிது குழப்பத்தில் உள்ளார். அவரோடு பேசி அடுத்த இலக்கு, எதிர்பார்ப்புகளை அறியவுள்ளேன். பின்னர் தேவையான ஊக்கமளித்து, புதிய சவால்கள் பற்றி எடுத்துக்கூற திட்டமிட்டுள்ளேன். சச்சின் மீண்டும் பிரகாசிப்பார். முன்பு போல் இல்லாவிட்டாலும் கூட, அணியில் முக்கிய பங்கு வகிப்பார். இவரைப் போன்ற மகத்தான வீரருடன் பணியாற்ற கிடைத்த வாய்ப்பை அரிய கௌரவமாகக் கருதுகிறேன்.




என்னைப் பொறுத்தவரை தனிநபர் சாதனைகள் எல்லாம் இரண்டாம் பட்சம்தான். அணியாகச் செயல்படுவதே முக்கியம். இந்த ஒழுக்கநெறியை அமுற்படுத்த முயற்சிகள் மேற் கொள்ளப்படும். உள்ளூர் அமைப்பாளர்கள் சூழ்நிலைக்கு ஏற்ற சிறந்த ஆடுகளத்தை அமைக்க வேண்டும். தலைவர் கங்குலியுடன் நல்ல அறிமுகம் உண்டு. பழகுவதற்கு இனிமையானவர். இவருடன் இணைந்து பணியாற்றுவதில் எவ்வித பிரச்சினையும் இல்லை என்றார்.

# சுனில் கவாஸ்கர் சாய்பாபா பக்தனாம்



"கடந்த 30 ஆண்டுகளாக சத்ய சாய்பாபா பக்தனாக இருந்து வருகின்றேன். அவரது அருளால்தான் எனது வாழ்விலும் குடும்பத்திலும் ஒளி வீசுகிறது" என கவாஸ்கர் உருக்கத்துடன் கூறுகிறார்.

கேரள மாநிலம் திருவனந்தபுரத்துக்கு அருகே உள்ள தென்னக்கால் பகுதியில் 'சாய் கிராமம்' அமைக்கப்படவுள்ளது. இது சத்தியசாய் அநாதை இல்ல அறக்கட்டளை சார்பில் ரூபா 240 கோடி செலவில் உருவாக்கவுள்ளது. இங்கு அநாதை இல்லம், பாலபவன், வைத்தியசாலை, முதியோர் இல்லம், வேதபாடசாலை எனப் பல்வேறு சேவைப் பணிகள் மேற்கொள் ளப்படவுள்ளன.

இதற்கான அடிக்கல் நாட்டிய பின் இந்தியா அணியின் ஜாம்பவான் கவாஸ்கர் பேசுகையில், கடந்த 30 ஆண்டுகளாக சாய்பாபாவின் தீவிர பக்தனாக இருந்து வருகிறேன்.

அவரது அருளால் தான் எனது குடும்பத்தில் ஒளி வீசுகிறது. சாய் கிராமம் திட்டத்திற்கு நிதி திரட்ட சேவாக், ராவிட் போன்ற நட்சத்திர வீரர்கள் பங்கேற்கும் கண்காட்சிப் போட்டிக்கு கிரிக்கெட் சபை ஏற்பாடு செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.



நிகாடாவில் நடந்த கிரின் கோபபைக்கான கால்பந்து போட்டியில் பெரு 1-0 என்ற கோல் கணக்கில் வென்றது. பெரு வீரர் கியூலனோ சாண்டியகோ (இடது), ஜப்பான் வீரர் யசுஹிடோ என்டோ இருவரும் பந்தை தட்டிச் செல்ல முற்படுகின்றனர்.

# ஒன்பதாவது சுற்றில் ஆனந்துக்கு வெற்றி



பல்கேரியா நாட்டிலுள்ள சோபியா நகரில் எம்டெல் மாஸ் டர்ஸ் செஸ் போட்டி நடந்து வருகிறது. இதன் ஒன்பதாவது சுற்றில் இந்திய கிராண்ட் மாஸ்டர்ஆனந்த், இங்கிலாந்து வீரர் மைக்கேல் ஆடம்ஸ்சை எதிர்கொண்டார். இதில் ஆனந்த் வெற்றி பெற்றார். இதன் மூலம்ஆனந்த்ஐந்து புள்ளிகள் பெற்று இரண்டாவது இடம் வகிக்கிறார். பல்கேரியா வீரர் தபலோவ் 5.5 புள்ளிகளுடன் முத லிடம் வகிக்கிறார். இன்னும் ஒரு சுற்று ஆட்டம் உள்ளது கடைசி சுற்றில் ஆனந்த் ஜூடித் போல்கருடன் (ஹங்கேரி) மோதுகிறார்.

# பட்டம் வென்றார் பின்லாந்து வீரர்

'பார்முலா-1' கார்ப்பந்தயத்தில் மொனாக்கோவில் நேற்று முன்தினம் நடந்த ஆறாவது சுற்றுப்போட்டியில் பின்லாந்து வீரர் கிமி ராய்க்கோனென் வெற்றி பெற்றார். இந்த ஆண்டுக்கான பார்முலா-1 கார்ப்பந்தயம் 19 சுற்றுகளாக நடத்தப்படுகிறது. இதில் அவுஸ்திரேலியாவில் நடந்த முதல் சுற்றில் பிசிசெல்லா (இத்தாலி) வெற்றி பெற்றார். மலேசியாவில் நடந்த இரண்டாவது சுற்று பக்ரைனில் நடந்த மூன்றாவது சுற்று, இத்தாலியில் நடந்த நான்காவது சுற்று ஆகியவற்றில் பெர்னாண்டோ அலோன்சா (ஸ்பெயின்) தொடர்ந்து வெற்றிபெற்றார். ஸ்பெயினில் நடந்த ஐந்தாவது சுற்றில் பின்லாந்து வீரர் கிமி ராய்க்கோனென் வெற்றி பெற்றார்.



இஸ்தான்புல் ஓபன் டென்னிஸ் இறுதிப் போட்டியில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் 6-3,6-2 என்ற நேர் செட்களில் செக்குடியரசை சேர்ந்த நிகோல் வைடி வாவை வீழ்த்தினார். சம்பியன் கோப்பை ...ர் வீனஸ்.

# ஒலிம்பிக் சம்பியன் மொரிஸ் கிறினுக்கு 100 மீற்றர் போட்டியில் நான்காவது இடம்

பிரபல ஓட்டப் பந்தைய வீரரும் ஒலிம்பிக் சம்பியனுமான மொரிஸ் கிறின் 100 மீற்றர் போட்டியில் தோல்வியடைந்துள்ளார்.


அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள கார்சன் நகரில் தடகளப் போட்டிகள் நடந்து வருகின்றன. இதில் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற மொரிஸ் கிறின் கலந்து கொண்டார்.

ஆனால், அவரால் வெற்றிபெற முடியவில்லை. நான்காவது இடத்தையே பிடிக்க முடிந்தது. தொடக்க ஓட்டத்தை தவறாக தொடங்கியதால் அவர் தோல்வியைச் சந்திக்க நேர்ந்தது. இந்தப் போட்டியில் லியானர்டு ஸ்காட் வெற்றி பெற்றார்.

நான் தற்போது கூடுதல் சக்தி பெற்று இருக்கின்றேன் என்று நேற்று முன்தினம் மொரிஸ் கிறின் பேட்டி கொடுத்திருந்தார். ஆனால், அவர் தோல்வியைச் சந்தித்தது ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது.

இந்த தடகளப் போட்டியின் 400 மீற்றர் ஓட்டத்தில் ஒலிம்பிக் சம்பியன் ஜெர்மி வாரினர் வெற்றி பெற்றார்.

மொனாக்கோவில் 'பார்முலா ஒன்று கார்ரேஸ் போட்டிகள் நேற்று முன்தினம் நடந்தன. இதில் பின்லாந்து வீரர் கிமி ரொய்க்கோனன் முதலிடம் வென்றார். கோப்பையுடன் ரெய்க் கோனன்.



# கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலக கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி

கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த விளையாட்டுக் கழகங்கள் கலந்து கொள்ளும் பெருவிளையாட்டுப் போட்டிகள் இம்மாதம் 27ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பூநகரி, பச்சிலைப்பள்ளி, கண்டாவளை, கரைச்சிப் பிரதேச செயலகங்களைச் சேர்ந்த பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்கள் கலந்து கொள்கின்றன.

போட்டிகள் அனைத்தும் கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானம், கிளி. உதயதாரகை விளையாட்டு மைதானங்களில் நடைபெறும்.

நீச்சல் போட்டி, வலைப்பாட்டில் நடைபெறுகின்றது. போட்டி விதிகள் :- சகல போட்டிகளுக்குமான உபகரணம் பகுதி விளையாட்டு அலுவலர்கள் கொண்டு வருதல் வேண்டும்.


சகல போட்டிகளும் இலங்கை சங்க விதிகளுக்கு அமைய நடைபெறும்.

மத்தியஸ்தர்கள் தீர்ப்பே இறுதியானது.

விளையாட்டு அபிவிருத்தித் திணைக்கள விதிகளுக்கமைய வதிவிடம் தீர்மானிக்கப்படும்.

வதிவிடப் பிரச்சினை நிரூபிக்கப்பட்டால் அக்குழு போட்டியிலிருந்து விலக்கப்படும்.

## சிந்தனைக்கு



நாம் துணிந்து போராடுவோம் சத்தியம் எமக்குச் சாட்சியாக நிற்கின்றது; வரலாறு எமக்கு வழிகாட்டியாக நிற்கின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 24-05-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## வெசாக் தின 'அன்பு' பயன் தராது

யாழ். குடா நாட்டில் நிலை கொண்டுள்ள 36 படைப்பிரிவுகளுக்கும் படைப் பிரிவுக்கு ஒன்று என்ற அடிப்படையில் 36 வெசாக்கூடுகளை அமைக்கவும், வெசாக் தினத்தை விமரிசையாகக் கொண்டாடவும் சிறிலங்காப்படைத்தரப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. அது குறித்து விளக்கம் அளிப்பதற்கு இரு தினங்களிற்கு முன்னர் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றையும் நடாத்தியுள்ளது.

இச்சந்திப்பில் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி மேஜர்ஜெனரல் சுனில்தென்னக்கோன், நாட்டில் நிரந்தர சமாதானம் மலர வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடும் அனைத்து மக்களும் இனமத வேறுபாடின்றி ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்ற உயரிய சிந்தனையோடும் பாதுகாப்புப் படையினரான நாம் யாழ்ப்பாணத்தில் வெசாக் தினத்தைக் கொண்டாடவுள்ளோம் எனத் தெரிவித்துள்ளார்.

பௌத்த மதத்தின் வழிகாட்டியான கௌதம புத்தர் பிறந்ததும் ஞானம் பெற்றதும் பரிநிர்வாண நிலையை அடைந்ததும், இவ்வைகாசிப் பௌர்ணமி தினத்திலேதான். இத்தகைய புனித நாளை பௌத்த மக்கள் தாம் வாழ்கின்ற பகுதிகளில்– ஆயுதப்படையினர் நிலை கொண்டுள்ள பகுதிகளிலும் கொண்டாட விளைவது தவறானதல்ல. இதனை வேற்றுமதத்தைச் சேர்ந்த மக்களும்,மதச் சார்பின்மை கோட்பாட்டை உறுதியாகக் கைக் கொள்பவர்களும் எதிர்க்கப் போவதுமில்லை.

ஆனால் சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பு யாழ். குடாநாட்டில் கொண்டாட முற்படும் வெசாக்தினக் கொண்டாட்டங்கள் கௌதம புத்தரின் புனிதமான சிந்தனைகளைப் பரப்பும் நோக்கம் கொண்டதாகவோ அன்றி படைத்தரப்பு கூறிக் கொள்வது போன்று நிரந்தர சமாதானத்திற்கும் இன பேதம் இன்றி மக்கள் வாழ்வதற்கும் வழி சமைத்துவிடமாட்டாது.

ஏனெனில் கௌதம புத்தர் போதித்த சிந்தனைகளையோ அன்றி சமாதானம் இன ஒருமைப்பாடு என்பனவற்றையோ நடைமுறையில் கொண்டிராத சிறிலங்கா ஆயுதப்படையினர் வெசாக் கூடுகளைக் கட்டுவதனாலோ அன்றி வெசாக் தினத்தில் தமிழ் மக்களை உபசரிப்பதாலோ இன ஐக்கியமும், ஒருமைப்பாடும் சமாதானமும் ஏற்பட்டுவிட மாட்டாது.

கௌதமபுத்தர் போதித்தவற்றுள் கொல்லாமை அன்பு,காருண்யம் போன்றவை முக்கியமானவையது. ஜீவராசிகள் படும் துன்பத்தைக் கண்டே அவர் தனது அரசவாழ்வைத்துறந்தார் எனவும் கூறப்படுவதுண்டு. கௌதமபுத்தர் இலங்கைக்கு இரு தடவை விஜயம் செய்தார் என்றும் அதன் நோக்கம் இலங்கையில் நிகழ்ந்த உள்நாட்டுச் சண்டையை முடிவிற்கு கொண்டு வந்து அமைதியை ஏற்படுத்தவே எனவும் கூறப்படுவதுண்டு.

ஆனால்,இன்று யாழ்.குடா நாட்டில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா ஆயுதப்படையினருக்கும் கௌதம புத்தரின் வாழ்க்கைக்கும், போதனைக்கும் எத்தகைய தொடர்பு உண்டு, ஈவு, இரக்கம், மனிதாபிமானம்,மனித உரிமைகள் யாவற்றையும் புறக்கணித்தே சிறிலங்கா ஆயுதப்படையினர் யாழ்.குடா நாட்டில் நிலை கொண்டுள்ளனர். அதாவது ஆக்கிரமிப்பாளராக –அடக்கு முறையாளராகவே அவர்கள் இங்குள்ளனர்.

மக்களின் அன்றாட வாழ்கையில் இடையூறாகவுள்ளனர். மக்கள் மீது வன்முறையைப் பிரயோகித்து அவர்களை இம்சைக்குள்ளாக்குகின்றனர். அடக்கு முறை மூலம் ஓர் இன மக்களை ஆட்சி புரிய எத்தனிக்கின்றனர். இந்த நிலையில் கௌதமபுத்தரின் போதனைக்கும் இவர்களின் நடவடிக்கைகளுக்கும் எத்தகைய தொடர்பு உள்ளது? இவர்கள் கூறுவது போன்று சமாதானமும் அமைதியும் எவ்வாறு ஏற்பட வாய்ப்புள்ளது.

இவை ஒரு புறம் இருக்க தமிழர் தாயகத்தின் வேறொரு பகுதியில் வெசாக் காலத்தில் கௌதம்புத்தரின் சிலைகளையே வன்முறைக்குக் காரணமாக்கும் வகையில் பௌத்த பிக்குகளும்– சிங்களக் காடையர்களும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். இதற்கு ஆயுதப்படைத் தரப்பும், பொலீசாரும் பாதுகாப்பும் ஒத்துழைப்பும் வழங்கி வருகின்றனர். இந்த நிலையில் யாழ். குடாநாட்டில் இராணு வத்தினர் ஏற்பாடு செய்யும் வெசாக் கொண்டாட்டங்கள் எவ்வாறு ஒற்றுமைக்கும், சமாதானத்திற்கும் வழி சமைப்பவையாக அமைய முடியும்?

சிறிலங்கா இராணுவம் உண்மையிலேயே இன மத பேதமின்றியும் சமாதானத்தை ஆதரித்தும் செயற்படுவது உண்மையானால் அது வெசாக் தினத்தைக் கொண்டாடுவதற்கு முன்பாக தமிழ் மக்கள் மீது மேற் கொண்டுள்ள ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் அராஜகங்கள் என்பவற்றைக் கைவிடவேண்டும். தமிழ் மக்களின் அச்சமற்ற சுதந்திரமான வாழ்விற்கு வழிவிட வேண்டும். அவ்வாறு நடந்து கொள்ளுமேயானால் இராணுவத்தினருக்கு பொங்கலுக்கும், தீபாவளிக்கும் தமிழ் மக்களிடம் இருந்தே அழைப்பு வரும். சித்திரைப்புத்தாண்டை இரு இனத்தவரும் சேர்ந்தே கொண்டாடலாம்.

அதை விடுத்து வெசாக் பந்தல்களை அமைப்பதும் அன்றைய தினத்தில் மட்டும் அன்பு பொழிவதும்அரவணைப்பதும் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி கூறியவற்றிக்கு உதவப் போவதில்லை. மாறாக வெசாக்தினக் கொண்டாட்டங்கள் என ஆயிரக்கணக்கான பிக்குகளை யாழ்.குடாநாட்டிற்கு அழைப்பதும், அவர்களைக் காவியுடையுடன் இம் மண் தங்களுடையதென்ற இறுமாப்புடன் குடாநாட்டில் வலம் வரவிடுவதும் நொந்து போயுள்ள மக்களை சினம் கொள்ளவைக்குமேயொழிய அன்பு பொழிய வைக்காது.

— ராமதாஸ்,நெடுமாறன், திருமாவளவன் —

# விளம்பரப் பலகையில் ஆங்கில எழுத்துக்களை தார் பூசி அழித்த வேளையில் கைது

சென்னையில் நேற்று வணிக நிலையங்களில் ஆங்கில எழுத்தைத் தார்பூசி அழித்துப் போராட்டம் செய்த திருமாவளவன் -பழ நெடுமாறன் - சேதுராமன் - ராமதாஸ் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

தமிழ்மொழியைக் காப்பதற்காக பா.ம.க.நிறுவனர் ராமதாஸ் தொல்.திருமாவளவன், பழ.நெடுமாறன், மருத்துவர் சேதுராமன் உள்ளிட்டவர்கள் தமிழப்பாதுகாப்பு இயக்கத்தை நடத்திவருவது தெரிந்ததே. இந்த இயக்கத்தை பல கட்டப்போராட்டங்களை நடத்தியுள்ளது. இப்போது கடைகளில் ஆங்கிலம் உள்ளிட்ட பிறமொழிப் பெயர்கள் எழுதப் பட்டுள்ளதை எதிர்த்தும் நேற்று வரை கால அவகாசம் வழங்கி அதை மாற்றித் தமிழில் பெயர் எழுதவேண்டும்' என்றும் இந்த இயக்கம் கோரிக்கை விடுத்து இருந்தது. அப்படி பெயர் மாற்றி எழுதாத விளம்பரங்களைத் தார்பூசி அழிப்போம் என்றும் எச்சரிக்கை விடுத்திருந்தனர். இதற்காக பா.ம.க. வினர் துண்டு பிரசுரங்களை கடைகடையாக விநியோகித்து வந்தனர்.

இதன்படி சென்னை உள்ளிட்ட பலஇடங்களில் கடைகளில் இன்று பிறமொழி எழுத்துக்கள் அழிக்கும் போராட்டம் நடக்குமென அறிவிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து நேற்றுக்காலை சென்னை அரசு மருத்துவக்கல்லூரி நுழைவு வாயிலில் வைக்கப்பட்டிருந்த மூன்று விளம்பரப் பலகை மீது ராமதாஸ், தொல். திருமாவளவன் உட்பட முன்னணியினர் கீழே நின்றபடியே விளம்பரப் பலகைகளில் எழுதப்பட்டிருந்த ஆங்கில எழுத்துக்களை ஒட்டடைக்குச்சி மூலம் தார் பூசி அழித்தனர் மூன்று விளம்பரப் பலகைகளில் அவர்கள் தார் பூசினர். இதில் ஒரு விளம்பரப் பலகை சீமெந்து நிறுவனத்துக்கு சொந்தமானதாகும். மற்றொரு பலகையில்கைக்கடிகார நிறுவன விளம்பரம் எழுதப்பட்டிருந்து. இன்னொரு பலகையில் அலகாபாத் வங்கியின் விளம்பரம் இடம்பெற்றிருந்தது. ஆங்கிலம், இந்தி மொழியில் அலகாபாத் வங்கிக்கு விளம்பரம் செய்யப்பட்டிருந்து இவர்கள் தார்பூசி அழிப்பதைப் பார்த்த பொலிசார் அங்கு சென்று அந்த ஒட்டடைக் குச்சிகளை பறி முதல் செய்தனர். பின்னர் அவர்களைக் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட அனைவரும் வாகனத்தில் ஏற்றிச் செல்லப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் ஒரு தனியார் திருமண மண்டபத்தில் தடுத்து வைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.இந்தச் சம்பவத்தின் காரணமாக அந்தப் பகுதியில் சிறிது நேரம் போக்கு வரத்து நெரிசலும், பரபரப்பும் ஏற்பட்டது. இதே வேளை நூற்றுக்கணக்கானோர் இந்தப் போராட்டத்தின் போது கைது செய்திருப்பதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# மகிந்த ராஜபக்ஷ பயணித்த உலங்கு வானூர்தி பதவியாவில் அவசர அவசரமாகத் தரையிறக்கம்

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பயணம் செய்த உலங்குவானூர்தி இயந்திரக் கோளாறு காரணமாக அவசரமாகத் தரையிறக்கப்பட்ட சம்பவம் கடந்த சனிக்கிழமை பதவியா பகுதியில் இடம்பெற்றுள்ளது. பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பண்டு கஸ்நுவரவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு விட்டு விசேட உலங்கு வானூர்தியில் கொழும்பு திரும்பிக் கொண்டிருந்தார். பதவியா பகுதிக்குச் சற்று முன்பாகப் பறந்து கொண்டிருந்த உலங்கு வானூர்தி இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டிருப்பதைக் கண்டுபிடித்த விமானி அதனை உடனடியகவே பதவியா பகுதியிலுள்ள வயல்ப்பிரதேசத்தினுள் தரையிறக்கினார். பின்னர் கொழும்பில் விமானப்படை தலைமையகத்திற்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து அங்கிருந்து வேறு உலங்கு வானூர்தி ஒன்று பதவியாவுக்கு அனுப்பப்பட்டது. அதன் பின்னர் பிரதமர் கட்டுநாயாக்கவுக்கு திரும்பினார். உலங்கு வானூர்தி அவசரமாகத் தரையிறக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விமானப்படையினர் விசாரணை மேற் கொண்டு வருகின்றனர்.

— கொட்டகலப் பகுதியில் —

# கசிப்பு வேட்டைக்குச் சென்ற பொலிஸ் அதிகாரிகள் மீது அரசியல்வாதியின் இணைப்பாளர் தாக்குதல்

திம்புல்ல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை கொட்டகல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

மலையக அரசியல்வாதி ஒருவரின் இணைப்பாளரே பொலிஸ் பொறுப்பதிகாரியின் மீது தாக்குதலை மேற்கொண்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. ரொசிட்டா தோட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி மையத்தை முற்றுகையிடச் சென்ற போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட கசிப்பு உற்பத்தியை மேற்கொண்டு வந்தவர்களைக் கைது செய்ய வேண்டாம் என்றும் கைது செய்யப்பட்ட ஐவரை விடுவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்திய நிலையிலேயே அரசியல் வாதியின் இணைப்பாளர் பொறுப்பதிகாரியின் மீது தாக்குதலை மேற்கொண்ட தாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தாக்குதலுக்கு உள்ளான பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியையும் திம்புல பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களையும் இடமாற்றம் செய்யப் போவதாகவும் குறித்த இணைப்பாளர் அச்சுறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர் ஏற்கனவே பொலிஸ் துறையில் சேவையாற்றியவர் என திம்புல பொலிசார் தெரிவித்துள்ளனர். (32)

# கடற்படைப் படகுகளுக்கு இயந்திரங்கள் கொள்வனவில் 10 கோடி ரூபா மோசடி

கொழும்பு டொக்யார்ட் நிறுவனத்தால் கடற்படைக்கென கட்டப்பட்டு வரும் அதிவேக தாக்குதல் படகுகளுக்காக ஜேர்மனிலிருந்து இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டதில் பத்துக்கோடி ரூபா கடற்படை அதிகாரியால் தரகுப்பணமாக பெறப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. கொழும்பு டொக்யார்ட் நிறுவனத்தால் கடற்படைக்கென பத்து அதிவேக தாக்குதல் படகுகளை கட்டும் பணி இடம்பெற்று வருகிறது. ஒவ்வொரு படகும் தலா ஆறு கோடிரூபா செலவில் கட்டப்பட்டு வருகிறது. இவற்றிற்கு பொருத்தவென ஜேர்மனியிலிருந்து இரண்டு மாதங்களுக்கு முன்னர் பத்து இயந்திரங்கள் வாங்கப்பட்டிருந்தன. இந்தக் கொள்வனவு ஒவ்வொன்றிலும் ஒருகோடி ரூபாவரை கடற்படை அதிகாரியால் தரகுப் பணமாகப் பெறப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பொதுக் கட்டமைப்பு உருவாகாவிட்டால் இலங்கைக்கு நிதிஉதவி கிடைக்காது

## -நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டால் மாத்திரமே உதவி வழங்கும் நாடுகள் உறுதியளித்த நிதியுதவிகள் இலங்கைக்குக் கிடைக்குமென நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கடந்த 16ஆம், 17ஆம் திகதி கண்டியில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் மூன்று பில்லியன் அமெரிக்க டொலர் நிதிய தவி வழங்குவதற்கு உறுதியளிக்கப்பட்டிருந்தது.

இந்த நிதியுதவியினை வழங்குவதற்கு உதவிவழங்கும் நாடுகள் நிபந்தனையெதுவும் விதிக்கவில்லையெனினும், பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்படாவிட்டால் உறுதியளிக்கப்பட்ட நிதியுதவிகள் வழங்கப்படாதென நிதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு நிதியுதவிகளை வழங்குவதைவிட, சமாதான முன்னெடுப்புக்கள் மீண்டும் உரிய முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதை இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் வெளிநாடுகளும், சர்வதேச பிரதிநிதிகளும் வலியுறுத்தியிருந்ததாகவும் அவர் கூறுகிறார்.

இதேவேளை ஜே.வி.பி கடைப்பிடிக்கும் பொருளாதார கொள்கைகள் உலக நாடுகளால் நிராகரிக்கப்பட்டவையாகும் என நிதி அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார். முன்னாள் கம்யூனிஸ்ட் தலைவர் சரத் முத்தட்டுவேகமவின் சிரார்த்த தின நிகழ்வு நேற்று முன்தினம் இரத்தினபுரியில் நடைபெற்ற போது அமைச்சர் இதனை தெரிவித்தார். ஜே.வி.பியின் பொருளாதார கொள்கைகள் நடைமுறைக்கு ஏற்புடையவையல்ல. அவற்றை சீனா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகள் கூட மறந்து விட்டன. இந்த நிலையில் ஜே வி.பி யுடன் தாம் ஒரு வருட காலம் பொருளாதார சீரமைப்பு தொடர்பாக பேசிய போதும் அவர்களுக்குப் புரியவைக்கமுடியவில்லை அவர்கள் மீண்டும் மீண்டும் பழைய கம்யூனிஸ்ட் பொருளாதாரத்துக்கே செல்லப்போவதாக கூறுகின்றனர் எனவே அவர்களுக்கு புரிய வைக்க முடியும் என தாம் நம்பவில்லை என்றும் அமைச்சர் அமுனுகம தெரிவித்தார். (32)

# சோரன் பற்று பாடசாலையில் வீர முரசு எழுச்சி நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

பச்சிலைப்பள்ளி பளை இயக்கச்சிப்பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் வீரமுரசு நிகழ்வும் மாவீரர் பெற்றோர்.கௌரவிப்பு நிகழ்வும் எதிர்வரும் 26 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இயக்கச்சிப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலர் புவனேந்திரன் தலைமையில் சோரன் பற்று கணேசா வித்தியாசாலை மைதானத்தில் மேற்படி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் கலந்து கருத்துரை வழங்கவுள்ளதுடன் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# யாழ்.கச்சாய் கடற்பரப்பில் கடற்படையினர் தீவிர பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். தென்மராட்சியில் உள்ள கச்சாய்கடற்பரப்பில்சிறிலங்கா கடற்படையினர் பயிற்சிகளில்தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இரவு,அதிகாலை மற்றும் நண்பகல் வேளைகளில் அண்மைக்காலமாக பயிற்சிகளை நடத்திவரும் சிறிலங்கா கடற்படையினர் சூட்டுப்பயிற்சிகளையும் எறிகணைப்பயிற்சிகளையும் நடத்திவருகின்றனர்.

இதனால் கச்சாய் கடற்பரப்பில் சென்றுகடற்றொழிலில் ஈடுபடுவதற்கு அப்பகுதி கடற்றொழிலாளர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். இவ்வாறான படையினரது செயற்பாடுகளால் அப்பகுதி கடற்றொழிலாளர்கள் பெரும் பீதியடைந்துள்ளனர். (33)

# சிறீலங்கா பிரதமர் இன்று தென்கொரியாவிற்குப் பயணம்

சிறிலங்கா பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நேற்றிரவு தென் கொரியாவிற்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

புதிய தசாப்தத்திற்கு ஏற்ற வகையில் இராஜதந்திரமுறையை மீண்டும் ஏற்படுத்துவது தொடர்பாக நடைபெறும் மாநாட்டின் ஆறாவது சுற்றில் கலந்து கொள்வதற்காகவே பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தென் கொரியா செல்லவிருப்பதாக அலரி மாளிகை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இன்றையதினம் தென் கொரியாவின் சோல் நகரில் நடைபெறவிருக்கும் இந்த மாநாட்டில் ஆசிய, ஆபிரிக்க மற்றும் தென்அமெரிக்க நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அரச நிர்வாகத்தை முறையாகவும், வினைத்திறன் உடையதாகவும் மாற்றுவதற்கான புதிய மார்க்கங்களைக் கண்டு பிடிப்பதே இந்த மாநாட்டின் முக்கிய நோக்கமென தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த மாநாட்டின் பின்னர் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தென்கொரிய பிரதமருடன் இருதரப்புப் பேச்சு வார்த்தை நடாத்தவிருப்பதாக அலரி மாளிகை அறிவித்துள்ளது

## அப்பாவி....

ஏமாற்றவும் நினைக்கின்றன. எம்மை சாதாரண மனிதர்களாக மதிக்காத இராணுவத்தினர் இன்றுமட்டும் வீதியில் எம்மை மறித்து உணவுப் பண்டங்களை வழங்க எத்தனிக்கின்றனர். தம்மால் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வுகளில் எம் மக்களைக் கலந்துகொள்ளச் செய்து தாம் தமிழ் மக்களோடு ஒன்றிணைந்து வாழ்வதாக சர்வதேசத்தை ஏமாற்றி நினைத்ததைச் சாதிக்க எண்ணுகின்றார்கள்.

அவர்களின் இன்றைய இந்தப் புனித நாளில் கூட வேலணைப் பகுதியில் என்ன நடந்தது? தமிழ்த்தினப் போட்டிக்காக நேற்றுக் காலை பாடசாலை சென்று கொண்டிருந்த வேலணை சைவப் பிரகாச வித்தியாலய மாணவன் சிவராசா ஜெனி என்பவரை நாரந்தணைப் பகுதியில் வைத்துசிங்களக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருக்கிறார். பதின்நான்கு வயது நிரம்பிய ஏதும் அறியாச் சிறுவன் வீதியால் சென்று கொண்டிருந்த போது கடற்படையினர் நீ வேவு பார்க்கின்றாயா என்று அவனைக் கேட்டு கண்களைக் கட்டி கைத்துப்பாக்கியைக் காதில் வைத்து பொல்லுகளால் கடுமையாகத் தாக்கப்பட்டிருக்கின்றான். இரவு முழுவதும் அச்சிறுவன் சிங்களக் காடையர்களால் கண் மூடித்தனமாகத் தாக்கப்பட்டான். சம நேரத்தில் இதே இராணுவத்தினரே தமது பண்டிகையையொட்டித் தமிழ் மக்களுக்கு உணவுப் பண்டங்களை வழங்கவும் தயார் செய்திருந்தனர். இந்த இரண்டில் இராணுவத்தின் உண்மை நிலை எது? தமிழ் மக்களுக்கு உணவு வழங்கி பண்டிகை கொண்டாடுவதற்காக பாடசாலை சென்ற மாணவனைக் கைது செய்து கண்மூடித்தனமான முறையில் தாக்குவதா?

எனவே அன்புக்குரிய மக்களே இந்த மாணவனுக்குச் செய்ததைச் செய்யவே சிங்களக் காடையர்கள் இங்கிருக்கின்றார்கள். உங்களுக்கு பண்டிகைப் பண்டம் வழங்க அல்ல என்பதை உணர்ந்து அவற்றை எல்லாம் புறக்கணிக்குமாறு வேண்டுகின்றோம் என்று தெரிவிக்கப் பட்டிருக்கின்றது.

## உந்துருளி...

பின் உறவினரிடம் மாலை ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவத்தினை பதிவு செய்து கொண்ட பருத்தித்துறை பொலிசார் உந்துருளியில் தப்பிச் சென்ற நபரைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர். (கா,33)

## சுழிபுரம்....

கடற்படையினர் அமைத்து வருகின்றனர்.

படையினரது இவ்வாறான நடவடிக்கைகளால் அப்பகுதி கடற்றொழிலாளர்களும், பொதுமக்களும் பெரும் பீதியடைந்துள்ளனர்.

சமாதான காலத்தில் பொது மக்களது இயல்பு வாழ்வுக்கு அச்சுறுத்தல் தரும்விதத்தில் படையினர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் கைவிடப்படவேண்டும் என இப்பகுதி கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (33)

# இன்று பூநகரியில் புகழேந்தியின் ஓவியக்கண்காட்சி

தமிழகஓவியர் புகழேந்தி அவர்களின் ஓவியக் கண்காட்சி இன்று பூநகரி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

காலை 8.30 மணிக்குஆரம்பமாகும் இக் கண்காட்சி மாலை 5.00 மணி வரைநடைபெற ஏற்பாடாகியுள்ளது.

பூநகரி பிரதேச அழகியல்கலாமன்றத்தின் ஏற்பாட்டில் இந்த ஓவியக் கண்காட்சி இடம்பெறவுள்ளது.

# திருமலையில் தொண்டு நிறுவனம் மீது சிங்களக் காடையர் குழு தாக்கு

திருகோணமலை-கன்னியா வீதியில் மிகுந்தபுர என்னுமிடத்தில் அமைந்துள்ள உள்ளூர் தன்னார்வ அமைப்பான திருகோணமலை மாவட்ட இளைஞர் அபிவிருத்தியகம் கடந்த சனிக்கிழமை இரவு ஏழரை மணியளவில் இனந்தெரியாதவர்களினால் தாக்கப்பட்டதாக மிகுந்தபுர மற்றும் உப்புவெளி பொலிசாரிடம் முறையிடப்பட்டது.

சுமார் பதினைந்து பேர்கொண்ட குழு ஒன்று அலுவலகத்தின் பிரதான வாசலில் வந்து கற்களால் வீசித்தாக்கியதாகவும் சிங்கள மொழியில் தகாதவார்த்தைகளால்பேசி அச்சுறுத்தியதாகவும் அந்தச்சம்பவத்தில் நிறுவனத்தைச் சேர்ந்த ஒருவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. காயமடைந்த வருடன் தாக்குதல் சமயம் அலுவலகத்தில் தங்கியிருந்த நான்கு பேர், பின் புறமாகத் தப்பி ஓடியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அக்குழுவின் அலுவலகத்தினுள் நுழைவதற்கு முயற்சித்தபோது படையினரால் அது தடுக்கப்பட்டது. அலுவலகத்திற்குத் தற்போது பொலிசார்,படையினர் பாதுகாப்பு வழங்கியுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

திருகோணமலை மாவட்ட இளைஞர் அபிவிருத்திஅகம் இன,மத,மொழி பேதங்களின்றி அபிவிருத்தி மற்றும் சமூகப் பணிகளை மேற்கொண்டு வரும் உள்ளூர் தன்னார்வ அமைப்பு ஆகும். (25)

# எரிபொருளின் விலையில் மேலும் அதிகரிப்பு ஏற்படலாம்

(கொழும்பு)

எரிபொருட்களின் விலையில் மேலும் ஒரு முறை உயர்வு ஏற்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது இதன்படி எதிர்வரும் ஜூன் முதல் வாரத்தில் இந்த விலையுயர்வு ஏற்படுத்தப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. அண்மையில் எரிபொருட்களின் விலைகளில் உயர்வுகள் ஏற்படுத்தப்பட்டமை காரணமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு ஓரளவு நட்டத்தை ஈடுசெய்ய முடிந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே உலக சந்தையின் எரிபொருள் விலை யேற்றத்துக்கு அமைய எரிபொருள் விலையில் மாற்றம் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து கூட்டுத்தாபனம் கவனம் செலுத்தியுள்ளது. இதன் அடிப்படையில் பெற்றோல் மீண்டும் இரண்டு ரூபாவால் அதிகரிக்கப்படலாம் என்றும் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றிலும் ஐந்திற்கும் மேற்பட்ட ரூபாய்கள் அதிகரிப்பு ஏற்படுத்தப்படலாமென எதிர்பாக்கப்படுகிறது. இதேவேளை மாதம் ஒன்றுக்கு பெற்றோலியக் கூட்டுத்தானத்திற்கு 2800 மில்லியன் ரூபா நட்டமேற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடகிழக்குஆளுநர் தலைமையில் திருமலையில் நாளை கூட்டம்

திருகோணமலையில் ஏற்பட்டுள்ள பதற்றத்தை நீக்கும் வகையில் நாளை வடக்கு கிழக்கு ஆளுநரின் தலைமையில் சமாதான கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. எனினும் இந்தக் கூட்டத்தில் தாம் பங்குகொள்ளப் போவதில்லை என வடக்கு கிழக்கு சிங்கள சங்கம் தெரிவித்துள்ளது இந்த நிலையில் அங்கு மேலும் பதற்றம் ஏற்படுமென அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (32)

## அழகிய....

சாலையில் ஒப்படைத்துள்ளனர். இது தொடர்பான மரண விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸ் நிலையஅதிகாரி தலைமையில் நடை பெற்றுவருகிறது.

## பி.பிஸி...

தடங்கல்கள் ஏற்படுமென தொழிற்சங்கம் எச்சரித்துள்ளது. நேற்றிரவு பி.பி.ஸி தமிழோசை ஒலிபரப்பப்பட்டபோதும் சிங்கள சேவையாகிய சந்தேசிய பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டது. (32)

## சதா...

மாவட்ட அரச அதிபர் தி. இராசநாயகம் ஆகியோர் ஏற்றிவைக்க, புகழுடலிற்கான ஈகச்சுடரினை அன்னாரது மைத்துனர் நாகராசா ஏற்றிவைத்தார். அடுத்து மலரஞ்சலி இடம்பெற்றது.

கிளி. அரச அதிபர். தி.இராசநாயகம், மனிதவள மேம்பாட்டு நிதித்துறைப் பொறுப்பாளர் அன்புச்செல்வன், போராளி சோலைக்குமரன், போராளி தூயவன்,கண்டாவளை மகாவித்தியாலய முதல்வர் ஸ்ரீதரன் ஆகியோர் இரங்கலுரை நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் கிளி. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன், தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் நாயகம் கே.பி.றெஜி,துணைப் பொறுப்பாளர் றீகன், தமிழீழ வைப்பக மேலாளர் வீரத்தேவன், வருவாய்த்துறைப் பொறுப்பாளர் மருதன், வணிகர் ஒன்றியத் தலைவர் வெற்றி அரசன், மற்றும் போராளிகள், அரச அரசசார்பற்ற நிறுவன ஊழியர்கள் திணைக்களத்தலைவர்கள், பொதுமக்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

இறுதியாக நேற்று பிற்பகல் 3.30 மணிக்கு நாட்டுப்பற்றாளர் அமரர் சதா. தனபாலசிங்கம் அவர்களின் புகழுடல் பன்னங்கண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டது.

இதேவேளை தமிழீழத்தின் தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவரான நாட்டுப்பற்றாளர் செம்பியன் செல்வன்,(ஆறுமுகம் இராஜகோபால் )அவர்களின் புகழுடல் நேற்று 11.30 மணியளவில் தீயுடன் கலந்தது.

யாழ்ப்பாணம் அத்தியடி வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில இறுதி அஞ்சலிக் கூட்டம் யாழ். மாநகரசபை ஆணையாளர் குணராஜா தலைமையில் நடைபெற்றது. அஞ்சலி உரையினை யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம், தமிழீழ கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை, நமது ஈழநாடு பிரதம ஆசிரியர் ராதேயன், எழுத்தாளர்களான கோபு, அரவிந்,விவேக் உட்பட இன்னும் பலர் நிகழ்த்தினர்.

அஞ்சலி உரையினைத் தொடர்ந்து நாட்டுப்பற்றாளர் செம்பியன் செல்வனின் புகழுடல் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் கோம்பயன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தீயுடன் கலந்தது. (சோ,சு)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில 2005 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது